भारत 2023 INDIA

# ஜி20- ஒரு அறிமுகம்

## ஜி20 பல்கலைக்கழக தொடர்புதிட்டத்திற்காக உருவாக்கப்பட்ட பின்னணி குறிப்பு



## அங்கீகாரம்

பேராசிரியர் சச்சின் சதுர்வேதி, மேலாண்மை இயக்குநர், ஆர்ஐஎஸ், அவர்களின் ஒட்டுமொத்த வழிகாட்டுதலின் கீழ் 'G20-ஒரு அறிமுகம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்திற்கான கணிசமான உள்ளடக்கம் திரு. மணிஷ் சந்த், டிஜிஐஜ மீடியா பிரைவேட் லிமிட்டெட், புதுதில்லி, அவர்களாலும், டாக்டர் பிரியதர்ஷி தாஷ், இணைப் பேராசிரியர்; டாக்டர் துர்கேஷ் ராய், ஆய்வு நிபுணர்; டாக்டர். ராகுல் ராஜன், ஆலோசகர்; மற்றும் டாக்டர் சயந்தன் கோஷல், ஆலோசகர் ஆகியோர் அடங்கிய ஆர்ஐஎஸ் குழுவாலும் வழங்கப்பட்டன.

திரு. அமிதாப் காந்த், G20 வழிநடத்துபவர்; திரு. ஹர்ஷ் வர்த்தன் ஷ்ரிங்லா, தலைமை ஒருங்கிணைப்பாளர்; திரு. முக்தேஷ் பர்தேசி, (G20); திரு. அபய் தாக்கூர், கூடுதல் செயலாளர் & துணை வழிநடத்துபவர் (G20) மற்றும் டாக்டர் சுமித் சேத், இணைச் செயலாளர் (கொள்கை திட்டமிடல் & ஆராய்ச்சி), வெளிவிவகாரத்துறை அமைச்சகம் ஆகியோருக்கு அவர்களின் வழிகாட்டுதலுக்காகவும் ஆதாரவுக்காகவும் எங்க மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

திரு. திஷ் மல்கோத்ரா, வெளியீட்டு அதிகாரி மற்றும் திரு சச்சின் சிங்கால், வெளியீட்டு உதவியாளார் ஆகியோர் அடங்கிய ஆர்ஐஎஸ் வெளியீட்டுக் குழுவால் இந்த அறிக்கை உருவாக்கப்பட்டது


Copyright © RIS, 2022

Published in 2022 by: RIS

भारत 2023 INDIA

# இந்தியா@ஜி20

## நம்பிக்கை, நல்லிணக்கம் மற்றும் அமைதிக்கான தலைமை

நம்பிக்கை, நல்லிணக்கம் , அமைதி மற்றும் நிலைத்தன்மை – இவையே, உலகின் மிகவும் முன்னேறிய மற்றும் வளர்சியுறும் நாடுகளை கொண்ட ஜி20 குழுவிற்கு இந்தியாவின் தலைமையை வரையறுக்கும் கருத்துகள். பிளவு கொண்ட, நிலையும் நிலம் சார்ந்த அரசியல் அழுத்தமும் நிலவும் ஒரு காலகட்டத்தில், பிரிந்துகிடக்கும் உலகில் அமைதியையும், நிலைத்தன்மையையும், பகிர்ந்துகொள்ளத்தக்க வளமையையும் நோக்கி உலகின் செயல் திட்டத்தை உருவாக்கும் வாய்ப்பை உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமான இந்தியாவிற்கு ஜி20 வழங்குகிறது.

### அனைவரையும் உள்ளடக்கியது & செயல்சார்ந்தது

16 நவம்பர் 2022 இந்தோனேஷிய தீவான பாலியில் நடந்த ஜி20 உச்சிமாநாட்டின் கடைசி அமர்வில் இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ ஜி20 தலைமைத்துவத்தை குறிக்கும் சிறியகைசுத்தியை பிரதமர் நரேந்திர மோடியிடம் வழங்கினார். 1 டிசம்பர் 2022 இல், அதிகாரபூர்வமாக, 30 நவம்பர் 2023 வரை ஓராண்டுகாலம் நீடிக்கும் ஜி20 தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுக்கொண்டது. இந்தியாவின் ஜி20 தலைமைப் பொறுப்பு “உள்ளடக்கியதாகவும், சாதிக்கும் பேராவல் கொண்டதாகவும், முடிவெடுக்கும்தன்மை கொண்ட, செயல் சார்ந்ததாகவும்” இருக்கும் என்று பிரதம மந்திரி மோடி உறுதி அளிக்கும் தொனியில் உரைத்தார். . இந்தியாவின் தலைமைப் பொறுப்பின் முக்கிய கருப்பொருள்களையும் முன்னுரிமைகளையும் வரையறுத்த பிரதமர் மோடி, அமைதி மற்றும் இணக்கத்தின் சார்பாக வலுமிக்க தெளிவான செய்தியை ஜி20 தெரிவிக்க வேண்டும் என்று அடிக்கோடிட்டு காட்டினார். அமைதியும் பாதுகாப்பும் இல்லை என்றால், “வருங்கால சந்ததி பொருளாதார வளர்ச்சியையும் தொழில்நுட்ப புத்தாக்கத்தையும் சாதகமாக்கிக்கொள்ள முடியாது” என்பதை வலியுறுத்தினார்.

## ஜி20 சின்னம்: மலரும் இதழ்கள், ஏழு இதழ்கள்

இந்தியாவின் ஜி20 தலைமைப் பொறுப்பின் சாராம்சம் “ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்” என்ற கருத்துருவில் அடங்கியுள்ளது. மேலும் அது “வசுதைவ குடும்பகம்” என்ற முற்கால சமஸ்கிருத விழுமியத்தைக் கொண்டது . மலரும் தாமரையையும் பூமியைத் தொட்டிலாட்டும் அதன் ஏழு இதழ்களையும் கொண்ட சின்னம், அனைத்து உயிர்களின், அதாவது – மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், மற்றும் நுண்ணுயிர்களின் – மதிப்பையும், பூமியிலும் அகன்ற பேரண்டத்திலும் அவை ஒன்றோடுஒன்று இணைந்திருப்பதையும் உறுதிசெய்கிறது. சின்னத்தை 8 நவம்பர் 2022 இல் அறிமுகப்படுத்தியபோது “ஜி20ன் சின்னமான தாமரை என்பது இக்காலத்தின் நம்பிக்கையாகும்,” என்றார் பிரதமர் மோடி. “தாமரையின் ஏழு இதழ்கள் உலகத்தின் ஏழு கண்டங்களைக் குறிப்பதோடு இசையின் ஏழு சுவரங்களையும் குறிக்கின்றன. ஜி20 உலகை ஒன்றாக ஓர் நல்லிணக்கம் கொண்டாதாக்கும். இந்தச் சின்னத்தில், தாமரை மலர் இந்தியாவின் தொன்மையான பாரம்பரியத்தையும், நம் நம்பிக்கையையும், நம் அறிவாற்றலையும் குறிக்கிறது,” என்று சின்னத்தை அறிமுகப்படுத்தும்போது பிரதமர் மோடி குறிப்பிட்டார்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் ஜி20 தலைமை ஓர் “அமிர்தகால” த்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. அதாவது 15 ஆகஸ்ட் 2022 இல் அதன் சுதந்திர தினத்தில் 75 வது ஆண்டை நிறைவு செய்து நூறாம் ஆண்டை நோக்கிய 25 ஆண்டுகால, எதிர்கால, செழிப்பான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வளர்ச்சியுற்ற சமூகத்தை நோக்கியும் நடைபோடுகிறது. மானுட மையத்துவம் அதன் தனித்தன்மையாகும்

## முக்கிய முன்னுரிமைகள்


நிலம் சார்ந்த அரசியல் அழுத்தங்களால் பாதிப்புக்குள்ளாகும் உணவு மற்றும் எரிபொருள் பாதுகாப்பு போன்ற பன்பரிமாண சிக்கல்கள் நிறைந்த ஓர் உலகில் மாற்றம் மற்றும் உல்களாவிய உருமாற்றத்திற்கான ஒரு கிரியா ஊக்கியாக ஜி20 -ஐ இந்தியா பார்க்கிறது. முரண்பாடுகளுக்குள் சிக்கிக்கொண்டு, சாதாரண மக்களின் வாழ்க்கையை ஆபத்துக்குள்ளாக்குகிற உலகில், உலக வளர்ச்சியைப் புதுப்பிப்பது, வலிமையான காலநிலை சார்ந்த செயல்பாடுகள், மற்றும் வலுவான உலக சுகாதார கட்டமைப்புகள் போன்ற பல சவால்களுக்கு, இந்தியா ஜி20 தலைமத்துவத்தின் மூலம் ஆக்கபூர்வமான, ஒருமித்த கருத்தை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகளை உருவாக்கும். பெருந்தொற்று பல லட்சக்கணக்கான மக்களை வறுமைக்குள் தள்ளிவிட்டதால் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை ஊக்குவிப்பது என்பது ஒரு முக்கியமான முன்னுரிமை ஆகும். வளங்குன்றா வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதை விரைவுபடுத்துவதும், (சுற்றுச்சுழலுக்கான வாழ்க்கை முறை, (LiFE) மூலம் சூழலுக்கு ஏற்ற நிலைத்த வாழ்க்கைமுறையைத் தழுவிக்கொள்ள உலகை வழிநடத்துவதும் அடுத்த சில மாதங்களுக்கான பிற முக்கிய முன்னுரிமைகள் ஆகும்.

இந்தியாவின் மைய வலிமை தகவல் தொழில்நுட்பத்தில் இருப்பதால், எண்ம, அதாவது டிஜிட்டல்கட்டமைப்பு உள்ளடக்குவதாக இருக்க வேண்டும் என்பதில் அது கவனத்தைச் செலுத்துகிறது. இதன் மூலம் அதால் சமூகப் பொருளாதார உருமாற்றத்தின் கிரியா ஊக்கியாக இருக்க முடியும்.உள்ளடக்கிய வளர்ச்சியும் நிதிசார்ந்த உள்ளடங்கலும் முக்கிய முன்னுரிமைகளாக இருக்கும். பிரிவு முரண்பாடுகளாலும் உலக நிறுவனங்களின் சரிவாலும் பிரிந்துகிடக்கும் ஓர் உலகில் உலக மொத்த உற்பத்தியில் அதாவது ஜிடிபி-யில் 85% ஐயும், சர்வதேச வணிகத்தில் 75% ஐயும், உலக மக்கள் தொகையில் 2/3 பங்கையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜி20, முன்னெப்போதையும் விட முக்கியமானதாக மாறுகிறது. இந்தியாவின் தலைமையின் கீழ், உலகப் பொருளாதாரம் மற்றும் நிதி பிரச்சினைகளில் ஒத்துழைப்பதற்காக முதன்மையான உலக அமைப்பாக ஜி20 இன் நிலையையும் அதிகாரத்தையும் உயர்த்த இந்தியா பாடுபடும். சொல்லப்போனால் 2008 ஆம் ஆண்டு உலகளாவிய நிதி நெருக்கடியின்போதுதான் ஜி20 உருவாக்கப்பட்டது. வளர்ந்த மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களைக் கொண்ட பலதரப்பு நாடுகளை பிரதிநிதித்துவப் படுத்தும் புதிய அமைப்பை உருவாக்கும் நெருக்கடிக்கு உலகம் அப்போது தள்ளப்பட்டது. (எனவே) தற்போதைய சூழலில் உலகம் “ஜி20 ஐ நம்பிக்கையுடன் பார்க்கிறது” என்று பிரதமர் கோடி வலியுறுத்தியுள்ளார்.

## வியப்பூட்டும் இந்தியா

அடுத்த கட்டமாக, ஜி20 இந்தியாவை முன்னிறுத்துவதற்கான ஓர் வாய்ப்பு. மக்களாட்சியின் தாய்நாடான, பொருளாதார முன்னேற்றத்தில் இருந்து அறிவியலும் தொழில்நுட்பமும், விண்வெளி, கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கம்சார் புதுநிறுவனங்கள் என பல்வேறுபட்ட துறைகள் ஒவ்வொன்றிலும் சிறப்போடு புதிய உச்சங்களை எட்டும் ,இந்தியாவின் புகழையும் பன்முகத் தன்மையையும் எடுத்துக்காட்ட ஜி20 ஒரு வாய்ப்பாக அமையும். இந்தியாவின் 56 வெவ்வேறு இடங்களில் இந்தியா 200க்கும் மேற்பட்ட, ஜி20 தொடர்பான கூட்டங்களை நடத்தும்; இந்தத் துடிப்பான, பன்முகத்தன்மை வாய்ந்த நாட்டுக்கு வெவ்வேறு நாடுகளில் இருந்து பங்கேற்ப்பாளர்களை வருவர்.அவர்களில் பெரும்பாலோனர்க்கு ஜி20 நிகழ்வுகள்தாம் அவர்களின் இந்தியாவைக் குறித்த முதல் அனுபவமாக, புரிதலாக இருக்கும்; அதனால் இந்தியர்கள் அனைவரும் முன்வந்து அவர்களைச் சிறப்பாக வரவேற்று தங்கள் குடும்பத்தில் ஒருவராக நடத்த வேண்டும். 20 நாடுகளின் இந்த அமைப்பை அடுத்த 12 மாதங்கள் இந்தியா தலைமை ஏற்று நடத்தும்போது இந்தியா எதை அடைய முயற்சி செய்கிறது என்பதைப் பற்றிய முக்கியமானவைகளையும் முன்னுரிமைகளையும் மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் அறிமுகப்படுத்தும் விதமாக இந்தியாவின் ஜி20 தலைமை பற்றிய சிறிய, அழகாக எழுதப்பட்ட முக்கிய கருத்துருக்களை இந்தப் அறிமுகக் சிறுநால் கொண்டுள்ளது. இன்னும் அதிகமான உள்ளடங்கலும் சமத்துவமுமான உலகை உருவாக்க முயலும் ஜி20 செயல்முறையில் இந்தியா உலகளவில் செல்வாக்கு செலுத்தும் தன் சான்றாதாரங்களை ஒன்றுதிரட்டி தன் அழிக்கவியலா முத்திரையைப் பதிக்கும் என்று நாம் நம்புகிறோம்.

# ஆற்றல் நிலைமாற்றம்: ஒரு பசுமையான உலகை வடிவமைத்தல்



இந்தியாவில் நடைபெற்றுவரும் புதுப்பிக்கும் ஆற்றல் புரட்சியில் குறைந்த கரிம வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காக ஆற்றல் நிலைமாற்றத்தை ஊக்குவிப்பது என்பது முக்கியமான முன்னுரிமை ஆகும். மேலும் இது இந்தியாவின் ஜி20 தலைமைப் பொறுப்பில் முக்கிய இடத்தைப் பிடிக்கும். புதிய அளவுகோல்கள், மற்றும் இலக்குகளையும் அமைத்து, இந்தியா அதன் பாதியளவு மின்சாரத்தைப் புதுப்பிக்கும் ஆற்றல்சக்திகள் மூலம் உற்பத்தி செய்யும் என்று ஏற்கெனவே அறிவித்துள்ளது. உள்ளடக்கிய நிலைமாற்றத்திற்கு இந்தியாவுக்கு, கால கெடுகொண்ட மற்றும் மலிவான நிதியுதவியும் தேவை. மேலும் வளரும் நாடுகளுக்கான உள்ளடக்கிய நிலைமாற்றத்திற்கு தொழில்நுட்பங்களை தடையின்றி தொடர்ந்து பெறுவது இன்றியமையாதது ஆகும்.

2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கிளாஸ்கோவில் நடைபெற்ற COP26 உலகளாவிய உச்சி மாநாட்டில் , அதாவது உலக காலநிலை மாற்றம் குறித்த, உலக நாடுகள் பங்கேற்ற 26வது மாநாட்டில் (COP 26), பிரதம மந்திரி மோடி உள்ளடங்கிய ஆற்றல் மாற்றம் பற்றிய தன் கருத்தினை வெளிப்படுத்தினார். அங்கு அவர் உலகுக்கு “பஞ்சாமிர்தம்” (ஐந்து அமுதங்கள்) என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தினார். இந்த ஐமுனைத் திட்டத்தில் அடங்குவன:

- 2030 இல் இந்தியா 500 GW புதைபடிவம் அல்லாத ஆற்றல் திறனை அடையும்.
- 2030 இல் இந்திய 50% ஆற்றல் திறனைப் புதுப்பிக்கும் ஆற்றல்ஆதாரங்களிலிருந்து இருந்து பெறும்.
- இப்போதில் இருந்து 2030 வரை மொத்தமாக எதிர்பாக்கப்படும் கரிம உமிழ்வில் ஒரு பில்லியன் டன்களை குறைக்கும்.
- 2030 இல் அதன் பொருளாதாரத்தில் கரிமச் செறிவில் 45%த்தினை குறைக்கும்.
- 2070 இல் இந்தியா பசுமைஇல்ல வாயுக்களை வெளியில் கலப்பதை நிகர பூஜ்யம் என்ற இலக்கை அடையும்.

இந்த “பஞ்சாமிர்தம்” காலநிலைமாற்றம் குறித்த செயல்பாட்டிற்கு இந்தியாவின் முன்னிகழ்வற்ற பங்களிப்பாகும். “பஞ்சாமிர்தம்” என்ற இந்தக் கருத்துரு, இந்தியாவின் ஜி20 தலைமைப் பொறுப்பு 2022-2023 இன் கீழ் ஆற்றல் பாதுகாப்பு மற்றும் ஆற்றல் மாற்றத்திற்கான முயற்சிகளுக்கு ஆதாரம் ஆகும். இந்தியா உலகின் மிக வேகமாக வளரும் பொருளாதரமாக இருப்பதால் அதற்கு உலகளாவிய வளர்ச்சிக்கு எரிசக்தி பாதுகாப்பு மிக முக்கியமானதாகும். எரிசக்தி சந்தையின் நிலைத்தன்மையை உறுதிசெய்ய எரிசக்தி வழங்கலில் எந்தக் கட்டுப்பாட்டையும் இதனால்தான் இந்தியா எதிர்க்கிறது..

நாட்டின் எரிசக்தி பயன்பாட்டில் புதுப்பிக்கும் எரிசக்தியின் பங்கை அதிகரிக்க அரசால் மேற்கொள்ளப்பட்ட முன்னோடியான பல முன்னெடுப்புகளால் ஆற்றல் மாற்றம் பற்றிய இந்தியாவின் பரிந்துரைப்பு அதிக ஒத்திசைவையும் நம்பகத்தன்மையையும் பெற்றுள்ளது. வணிக மற்றும் தொழிற்சாலை நுகர்வோரை பசுமை ஆதாரங்களில் இருந்து கிடைக்கும் மின்சாரத்துக்கு மாற விதிகளைத் தளர்த்தி அனுமதித்ததின்

மூலம் இந்தியா தன் புதைபடிவ எரிபொருளால் இயக்கப்படும் பொருளாதாரத்தின் கரிமநீக்கத்தை வேகப்படுத்தியுள்ளது. 30% உலகளாவிய உமிழ்வுகளுக்கு காரணமாக இருக்கும் கனரக தொழிற்சாலை மற்றும் நீண்ட தூர போக்குவரத்து துறைகளில் கரிம நீக்கம் செய்யும் நோக்கத்தோடு எடுக்கபப்டும் ஓர் உலகளாவிய முன்னெடுப்பான முதன்மையாக முன்னோக்கி செல்வோர் கூட்டணியில் ( “ஃபஸ்ட் மூவர்ஸ் கொலிஷன்) இந்தியா இணைந்துள்ளது.

பிரான்சுடன் இணைந்து இந்தியா சர்வதேச சூரியசக்தி ஆற்றலுக்கான கூட்டணியை (ஐஎஸ்ஏ) தொடங்கியுள்ளது. மேலும் அது ‘ஒரு சூரியன், ஓர் உலகம், ஒரு தொடர்புவலை என்பதை நோக்கி செயல்படுகிறது. ஐஎஸ்ஏ உலகளாவிய சூரியசக்திக்கான இயக்கமாக மாறியுள்ளது. சூரிய ஆற்றலை உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் இந்தக் கூட்டணியில் 100 நாடுகளுக்கு மேல் இணைந்துள்ளன.

ஆற்றல் நிலைமாற்றத்தை முன்னெடுத்து செல்ல. சுத்தமான, நிலைத்த மற்றும் மலிவான ஆற்றல் மாற்றங்களை துரிதமாக உறுதிப்படுத்தவும் ஆற்றல் அமைப்புகளின் நிலைமாற்றம் மற்றும் பன்முகப்படுத்துதலை இந்தியா ஆதரிக்கிறது. இந்த வகையில், இந்தியா வளரும் நாடுகளுக்கு, குறிப்பாக மிகவும் பாதிப்புறும் நிலையில் இருப்பவைகளுக்கு தொடர்ந்த ஆதரவைப் பரிந்து பேசுகிறது; மலிவான, நம்பகமான, நிலைத்த, மற்றும் நவீன ஆற்றல், திறன் கட்டமைத்தல், பொது களத்துக்குள் மலிவான நவீன தொழில்நுட்பம், இருதரப்புக்கும் பயனளிக்கும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் எரிசக்தி துறையில் தணிப்பு நடவடிக்கைகளுக்கு நிதியுதவி ஆகியவை இதில் அடங்கும்.

முன்னோக்கிப் பார்வையில் சூரிய ஆற்றல் உற்பத்தியை அதிகரிக்கவும், தொழில்துறை மற்றும் எரிசக்தி நுகர்வோர்கள் பரந்த அளவில் பயன்படுத்த அதை மேலும் மலிவாக்கவும் இந்தியா ஐஎஸ்ஏ-யை துணைவலுவாக்கி, பசுமை வளர்ச்சி மற்றும் புதுப்பிக்கும் ஆற்றலை நோக்கிய ஆற்றல்மாற்றம் என்ற சூழலில் இந்தியா சூரிய ஆற்றல் பயன்பாட்டை மேம்படுத்துவதை ஊக்குவிக்கும். இந்தியாவின் பார்வையில், சூரிய ஆற்றலே எதிர்காலத்தின் புதுப்பிக்கும் ஆற்றல். அது பெரும் அளவில் புதைபடிவ ஆற்றலை சார்ந்திருப்பதை கணிசமாகக் குறைக்கும். தொழிநுட்ப மாற்றம் மற்றும் அறிவு மாற்றம் மூலம் ஜி20 தலைமைப் பொறுப்பின் கீழ் இந்தியா நடந்துவரும் ஆற்றல் நிலைமாற்றத்தை ஊக்குவிக்கும். வரும் நாட்களில், சூரிய மற்றும் புதுப்பிக்கும் தொழில்நுட்பங்களில் புத்தாக்கங்களை ஊக்குவிக்க சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவது இந்தியாவின் முக்கிய முன்னுரிமையாக இருக்கும்.

# ஆர்வமூட்டக்கூடிய ஒன்றை நோக்கி: சுற்றுச்சூழலுக்கியைந்த வாழ்க்கைமுறையை ஊக்குவித்தல்

உலகம் முழுவதும் வெப்பமயமாதல் அழிவைக் கட்டவிழ்த்துவிடும் இந்த வேளையில் காலநிலை உண்மையிலேயே மாறிவிட்டது. ஆறுகள் வற்றிவருகின்றன, பனிமலைகள் உருகுகின்றன, மற்றும் உலகின் பல பகுதிகளில் கடும் வெப்பநிலைகள் நிலவுகின்றன, இதனால் எங்கும் பார்த்தாலும் துன்பங்கள் ஏற்படுகின்றன. வெள்ளம், பஞ்சம் மற்றும் சூறாவளி போன்ற காலநிலையால் தூண்டப்படும் அசாதாரண நிகழ்வுகள் நம் இருப்பையே ஆபத்துக்குள்ளாக்குகின்றன. நாம் எதிர்நோக்கும் இந்த காலநிலை அவசரநிலையை சமாளிக்க இந்தியா தன் முன்முயற்சியாக LiFE – சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கைமுறை – என்ற நிலைத்த மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைமுறை என்பதை முன்னெடுத்து, ஜி20 உட்பட அனைத்து உலகளாவிய செயல்திட்டங்களில் முன்வைத்துள்ளது. 1 நவம்பர் 2021 இல் கிளாஸ்கோவில் நடைபெற்ற வருடாந்தர உலக காலநிலை உச்சிமாநாட்டில் இந்தக் கருத்துரு பிரதமர் நரேந்திர மோடியால் அறிமுகப்படுத்தப்பட்டது. "சுற்றுச்சூழலைப் பாதுகாத்துக் காப்பாற்ற "சிந்தனையின்றி அழிவுபூர்வமான பயன்பாட்டுக்குப் பதில், சிந்தனையுடன் கவனமாகப் பயன்படுத்துவதை" நோக்கிய சர்வதேச பெருந்திரள் இயக்கமாக LiFE ஐ மாற்ற வேண்டும் என்று உலக சமுதாயத்தைத் தன் பேச்சில் பிரதமர் மோடி கேட்டுக்கொண்டார்.

"பூமியின், பூமிக்காக, பூமியினால் வாழ்க்கைமுறை" என்பதைத் தேடும் முயற்சியில் LiFE ஒரு தனிநபரை காலநிலை மாற்றத்துக்கு எதிரான நடவடிக்கையின் மையமாக வைக்கிறது. சிக்கலானதும் பேரளவிலானதுமான கொள்கை விவாதங்களையும் அரசு மற்றும் சர்வதேச முகவாண்மையங்களையும் கடந்து, பசுமைஇல்ல வாயு உமிழ்வைக் கட்டுப்படுத்த ஒரு தனிநபர் அலுவலகத்துக்கு அல்லது உடற்பயிற்சி நிலையத்துக்குச் செல்ல மிதிவண்டியை பயன்படுத்துவது போன்ற எளிமையாகச் செய்யக்கூடிய வாழ்க்கைமுறை மாற்றங்களை LiFE ஊக்குவிக்கிறது. ஆழமாக வேரூன்றிய தனிநபர் மற்றும் சமுதாய நடத்தைகளை மாற்றுவது மட்டுமே சுற்றுச்சூழல் மற்றும் காலநிலைச் சிக்கல்களில் ஒரு மாற்றத்தை உண்டாக்கும் என்ற அடிப்படை நம்பிக்கையே LiFE இன் உயிர்த்துடிப்பாகத் திகழ்கிறது. உலக மக்கள் தொகையான 800 கோடிப் பேரில் 100 கோடிப் பேர் தங்கள் தினசரி வாழ்க்கையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த நடத்தைகளைக் கடைப்பிடித்தாலே உலகளாவிய பசுமைஇல்ல உமிழ்வில் ஏறக்குறைய 20% குறைந்துவிடும் என்று ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (யுஎன்இபி) கூறுகிறது. இந்தப் புதிய செயல்திட்டத்தில் இத்தகைய வாழ்க்கைமுறையைக் கடைப்பிடிப்பவர்கள் LiFE இன் கீழ் பூமிக்கு ஆதரவான மக்கள் (Pro Planet People) என்று அங்கீகரிக்கப்படுகின்றனர்.


ஒற்றுமையின் பெருஞ்சிலைக்காகப் புகழ்பெற்ற கேவடியா என்ற குஜாரத்தில் உள்ள நகரத்தில் ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோ கட்டரஸின் முன்னிலையில் பிரதமர் நரேந்திர மோடி 'LiFE திட்டத்தை' துவக்கிவைத்து நிலைத்த வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் தன் திட்டத்துக்கு புத்துயிர்ப்பைப் கொடுத்தார். ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த பங்களிப்பை அளிப்பதன் மூலம் ஜனநாயக முறையில் காலநிலை மாற்றத்துக்கு எதிரான போராட்டத்தை 'LiFE திட்டம்' முன்னெடுக்கிறது என்று பிரதமர் மோடி கூறினார். 'LiFE திட்டம்' பூமிக்கு ஆதரவான மக்கள் என்ற கருத்தை வலிமைப்படுத்தும் என்று வலியுறுத்திய பிரதமர் மோடி இது பூமிக்கான மக்கள் மாதிரியை, அதாவது பூமிக்கு ஆதரவான மக்கள் என்ற உணர்வை வலுப்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்தார். இந்திய மரபுகள் மற்றும் கலாச்சாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியான மறுபயன், குறைத்தல் மற்றும் மறுசுழற்சி என்பது LiFE திட்டத்தின் பகுதியாகவும் இருந்து மக்கள் வளங்குன்றா தேர்வுகளைச் செய்ய ஊக்குவிக்கிறது.

தனிநபர்களைத் தங்கள் அன்றாட வாழ்க்கையில் எளிய ஆனால் சுற்றுச் சூழலுக்கு ஏற்ற, பலனளிக்கும் நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்கத் தூண்டுவதும் (தேவை), மாறிவரும் தேவைக்கு ஏற்ப தொழிற்சாலைகளையும் சந்தைகளையும் துரிதமாக எதிர்வினை புரியவைப்பதும் (வழங்கல்), வளங்குன்றா நுகர்வையும் உற்பத்தியையும் ஆதரிப்பதற்கு அரசு மற்றும் தனியார் கொள்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதும் (கொள்கை) LiFE செயல்திட்டத்தில் உள்ளடங்கியுள்ளன.

உலக நலனுக்கான மாற்றத்தைக் கொண்டுவரும் ஆற்றல் LiFE க்கு இருப்பதால், ஜி20 செயல்திட்டத்தில் வளங்குன்றா வாழ்க்கைமுறையை இந்தியா வைத்துள்ளது. உலகளாவிய மொத்த பொருளாதார உற்பத்தியில் ஜிடிபி-யில் 80% -ம், உலகளாவிய பசுமைக்குடில் உமிழ்வுகளில் 80% -ம் ஜி20 யின் பங்காக உள்ளது. இந்தியாவின் பார்வையில் பசுமை வாழ்க்கை முறைக்கு ஓர் உலகளாவிய இயக்கமாக மாற்றும் அளவுக்கு LiFE திறம்படைத்ததாக உள்ளது. காலநிலை மாற்றத்துக்கு எதிரான போராட்டத்துக்கும், ஐநாவால் உருவாக்கப்பட்ட வளங்குன்றா வளர்ச்சி இலக்குகளை அடைய ஒரு நிலைத்த வாழ்க்கை முறைக்கு வழிகோலவும் LiFE திட்டம் உலகுக்கு உதவும். இந்தச் சுழலில், 15 நவம்பர் 2022 இல் பாலியில் நடந்த ஜி20 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி LiFE இன் முக்கியத்துவத்தைப் தெளிவாக எடுத்துக் காட்டினார். "பூமியின் பாதுகாப்பான எதிர்காலத்துக்கு அறங்காவல் உணர்வுதான் தீர்வு. இதற்கு LiFE முன்னெடுப்பு பெரும் பங்களிப்பை அளிக்கும். நிலைத்த வாழ்க்கை முறையை ஒரு பெருந்திரள் இயக்கமாக மாற்றுவதே அதன் நோக்கம். காலநிலை மாற்றம் பற்றிய உலகளாவிய விவாதத்தில் மாறுதல் கொண்டுவரும் இந்தியாவின் முயற்சிக்கு அங்கீகாரமாக, ஜி20 பாலி மாநாட்டுத் தலைவர்களின் கூட்டறிக்கை, நிலைத்த வளர்ச்சியும் வாழ்க்கை முறையும், மூலப்பொருட்களை பயன்படுத்தும் திறன் மற்றும் சுழற்சிசார்ந்த பொருளாதாரத்தையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

உலக சமுதாயத்தில் இருந்தும், இந்தியாவில் ஓர் நல்வாழ்விற்க்கான பசுமை வாழ்க்கைமுறையை விருன்புவோரிடமுமிருந்தும் ஆதரவைப் பெறுவதால் இந்தியாவின் ஜி20 தலைமையின் கீழ் LiFE ஒரு கூடுதல் உத்வேகத்தை அடையும். வரும் மாதங்களில், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் உலகளாவிய மந்திரச்சொல்லாக மாறக்கூடிய வாய்ப்பு LiFE க்கு உள்ளது. LiFE திட்டம் உலகத் தலைவர்களிடம் இருந்து உற்சாகமான வரவேற்பைப் பெற்றுள்ளது. பசுமை மாற்றத்தை ஊக்குவிக்க இந்தியா அதை "வசுத்தைவ குடும்பகம்" என்ற தனது ஆன்மீகக் கருத்தோடு இயைந்த முன்முயற்சியை அவர்கள் பாராட்டியுள்ளனர். "ஒரு பூமி ஒரு கோளம் ஒரு எதிர்காலம்" என்ற ஜி20 இந்தியத் தலைமைப் பொறுப்பின் குறிக்கோள், வாழ்க்கைக்கு ஆதரவான கோளம் மற்றும் மக்கள் என்பதன் சாராம்சத்தை கொண்டுள்ளது. பூமியைப் பாதுகாக்க குடிமக்களுக்கும் அரசாங்கங்களுக்கும் விடுக்கப்படும் அறைகூவலே LiFE திட்டம் ஆகும்

.




# பிளவை நீக்கல்: டிஜிட்டல் பொது பொருட்களும், சேவைகளும்

கோவிட்-டுக்குப் பிந்திய உலகில் டிஜிட்டல் உருமாற்றம்தான் புதிய விதிமுறை. கோவிட்-19கிற்குப் பின்னர், இணையம் நமது வகுப்பறையும், பணியிடமும், சந்திக்கும் இடமும் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளும் பிடித்த அமைப்பும் ஆனது. டிஜிட்டலின் நிலைமாற்றம் தரும் ஆற்றலைக் கணக்கில் கொள்ளும்போது, டிஜிட்டல் நிலைமாற்றத்தைப் பல்வேறு கருத்துகள் மற்றும் மக்களைத் உள்ளட்டக்கி கொண்டு செல்வதை வேகப்படுத்துவது என்பது இந்தியாவின் ஜி20 தலைமைப் பொறுப்பின் போது முக்கிய கவனமாகவும் செயல்திட்ட முன்னெடுப்பாகவும் இருக்கும். இந்த டிஜிட்டல் உருமாற்றத்தில் டிஜிட்டல் பொருளாதாரம், டிஜிட்டல் நிதியுதவி, டிஜிட்டல் அரசு, டிஜிட்டல் சுகாதாரம் மற்றும் டிஜிட்டல் கல்வி ஆகியவை அடங்கும்.

ஏழ்மைக்கும் காலநிலை மாற்றத்திற்கும் தீர்வாக டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த முடியும். இந்தப் பின்னணியில் கருத்தில் கொண்டால், இந்தியாவில் 2014 ஆம் ஆண்டில் சுமார் 50% இந்தியர்கள் வங்கிக் கணக்குகள் வைத்திருந்தனர், ஆனால் இப்போது 80% பேர் வங்கிக் கணக்குகளை வைத்திருக்கும் டிஜிட்டல் உருமாற்றத்தின் சாதனையை இந்தியா எடுத்துக்காட்டி உலகிற்கு வழிகாட்ட முடியும் – மேலும் இந்தத் துறையில் வளர்ந்த, வளர்ச்சியுறும் உலகிற்கு தன் நிபுணத்துவத்தைப் பகிர முடியும்.

சமூகப் பொருளாதார மாற்றமாக மாறத்தக்கதாக டிஜிட்டல் கட்டமைப்பை அனைத்தையும் உள்ளடக்கியதாக மாற்றுவதில் இந்தியா கவனம் செலுத்துகிறது. ஆளுகையில் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிப்பதை உள்ளடக்கிய முக்கியபகுதிகளில் அளவையும் வேகத்தையும் அடைய டிஜிட்டல் உருமாற்றம் முக்கியமானதாகும். இந்தியா உருவாக்கியிருக்கும் டிஜிட்டல் பொது நன்மைகளின் கட்டமைப்பு ஜனநாயக கோட்பாடுகளுக்குள் பொதிந்துள்ளன. இந்தத் தீர்வுகள் வெளிப்படை ஆதாரங்கள், வெளிப்படை ஏபிஐ-கள், வெளிப்படையான தரநிலைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன; இவை ஒன்றுக்குள் ஒன்று செயல்படக்கூடியவை மற்றும் பொதுவானவை. இந்தியாவால் முன்னெடுக்கப்பட்ட ஒருங்கிணைந்த செலுத்தும் முறைமை (அதாவது யூனிஃபைடு பேமெண்ட் இன்டர்ஃபேஸ் (யூபிஐ)) என்பது டிஜிட்டல் பொதுநலன்னுக்கான ஓர் உதாரணம் ஆகும். கடந்த ஆண்டில் உலகின் 40% நிகழ் நேர பணம்செலுத்தல்கள் யூபிஐ மூலமே செய்யப்பட்டன. அது போலவே, 460 மில்லியன் புதிய வங்கிக் கணக்குகள் டிஜிட்டல் அடையாள அடிப்படையில் துவங்கப்பட்டன. இது இந்தியாவை இன்று நிதிசார்ந்த உள்ளடங்கலில் வழிகாட்டியாக மாற்றியுள்ளது. மனித சமுதாயத்தில் இந்தியாவின் திறந்தமூல ஆதார அடிப்படையில் உருவாக்கபட்ட, கோவின் (CoWIN) இயங்கு தளம் மாபெரும் தடுப்பூசி செலுத்தும் முயற்சிக்கான முன்னெடுப்பாக பரந்த அளவில் பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டுகளில் இந்தியாவால் உருவாக்கப்பட்ட டிஜிட்டல் உள்கட்டமைப்புகளின் முக்கிய கூறுகளாக ஆதார், டிக்ஷா, ஸ்வயம் ஆகியவை விளங்குகின்றன. இந்திய ஒருன்கிணைந்த பொருள்நிர்வாக இடைமுக இயங்குதளமான, யுலிப்பை ( ULIP – யூனிஃபைடு லாஜிஸ்டிக்ஸ் இன்டர்ஃபேஸ் தளம்) மேம்படுத்தி வருகிறது மேலும் டிஜிட்டல் வணிகத்திற்கான வலைப்பின்னலை (ஓஎன்டிசி-யை (ஓப்பன் நெட்வொர்க் ஃபார் டிஜிட்டல் காமெர்ஸ்)) உருவாக்கி வருகிறது.

ஆனால் டிஜிட்டல் அணுகலை இந்தியா அனைவருக்கும் கிடைக்கச் செய்கின்ற அதே காலகட்டத்தில் உலக அளவில் மாபெரும் டிஜிட்டல் பிளவு காணப்படுகிறது. உலகில் அதிகமான வளர்ச்சியுறும் பல நாடுகளில் குடிமக்களுக்கு எந்த வகையான டிஜிட்டல் அடையாளமும் இல்லை. 50 நாடுகளிலேயே டிஜிட்டல் பணம்செலுத்தல் அமைப்புகள் உள்ளன. இந்தச் சூழலில், டிஜிட்டல் நிலைமாற்றம் மூலம் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் பயனடைய இந்தியா வலியுறுத்தும். இதனால் உலகில் உள்ள எவரும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் நன்மைகளை அடையாமல் போக மாட்டார். பாலியில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில் பேசும்போது பிரதமர் மோடி இந்தியா தனது ஜி20 தலைமைப் பொறுப்பில் இருக்கும் காலத்தில் இந்த இலக்கினை அடைய பிற ஜி20 நாடுகளுடன் இணைந்து செயல்படும் என்று குறிப்பிட்டார்.

'மேன்பாட்டிற்க்காக தரவு' என்ற கொள்கை இந்திய தலைமைப் பொறுப்பின் ஒட்டுமொத்தக் கருத்தான 'ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம்' என்பதன் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும்.

வறுமை, கல்வி, சுகாதாரம் மற்றும் நேரடி நன்மை மாற்றம் ஆகியவற்றில் நிலைத்த மேம்பாட்டு இலக்குகளை அடைய டிஜிட்டல் உருமாற்றத்தை முக்கியமானதாக இந்தியா பார்க்கிறது. டிஜிட்டல் உருமாற்றத்தின் நன்மைகள் மனித குலத்தின் ஒரு பகுதியினரிடம் மட்டுமே அடங்கிவிடக்கூடாது என்பதை ஜி20 நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும் என்பதற்காக அவற்றோடு இந்தியா இணைந்து பணிபுரியும்.

முன்னோக்கிச் செல்லுதல், டிஜிட்டல் மற்றும், பசுமைக்கு மாறுதல் ஆகியவை பெரும் வாய்ப்புகள் ஆகும். "400 மில்லியன் மக்களுக்கு டிஜிட்டல் அடையாளம் இல்லை; 200 மில்லியன் மக்களுக்கு வங்கிக்கணக்குகள் இல்லை; ஏறக்குறைய 133 நாடுகளில் துரித பணம்செலுத்துதல் இல்லை. ஆகவே, உலகை உருமாற்ற இது ஒரு மாபெரும் வாய்ப்பு," என்று கூறுகிறார், இந்தியாவின் ஜி20 வழிநடத்தியான திரு. அமிதாப் காந்த்



# காலநிலை நிதி: பசுமை வளர்ச்சிகான நிதியளித்தல்

பசுமை மாற்றத்தையும் பசுமை மேம்பாட்டையும் வேகப்படுத்துவதற்கான முக்கிய விசையாக காலநிலை நிதி உள்ளது. புவி வெப்பமயமாதலின் அழிவுதரும் விளைவுகளை பற்றி உலகம் அதிகமாக உணார்ந்துவரும் நிலையில், வளர்ந்த நாடுகளில் இருந்து வளர்ந்துவரும் நாடுகளுக்கு அளிக்கப்படும் நிதியுதவி ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் துரிதமாக வழங்கப்பட வேண்டும் என்பது ஓர் அவசரமான புள்ளியாகும். பசுமைக்குடில் வாயு உமிழ்வில் வரலாற்று ரீதியாக வளர்ந்த நாடுகளே பெரும் அளவிற்கு காரணமாக இருக்கின்றன என்பதை வலியுறுத்தி இந்தியா சர்வதேச அரங்குகளில் அதற்காகத் தொடர்ந்து குரல்கொடுத்து வருகிறது. இந்த காரணத்தின் அடிப்படையில், பிற வளர்ந்துவரும் நாடுகளோடு இணைந்து, ஜி20 இல் பசுமை மாற்றத்துக்கான கால நிலை நிதியை துரிதமாகக் தரவேண்டுமென வலியுறுத்துகிறது. 2009 இல் COP15 கோபன்ஹேகன் உச்சிமாநாட்டில், வளர்ந்து வரும் நாடுகள் காலநிலை மாற்றத்தை சமாளிக்கும் வகையில் எதிர்கொள்ள வளர்ந்த நாடுகள் 2020 க்குள் 100 பில்லியன் யுஎஸ் டாலர்களை இணைந்து அளிப்பதாக ஒத்துக்கொண்டன.ஆனால் 14 ஆண்டுகள் கழிந்த பின்னும் இந்த இலக்கின் ஒரு பகுதியே எட்டப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில், காலநிலை நிதியைத் துரிதமாகப் பெறுவதும், கால நிலை நிதியைத் திரட்டும் இலக்கினை அடையும் நிலையை உருவாக்குவதும், இந்தியாவின் ஜி20 தலைமைக்கு முன்னுரிமையாகும். இந்தியாவின் கருத்து என்னவெனில், ஆண்டுக்கு 100 பில்லியன் யுஎஸ் டாலர் என்ற அடிப்படையைக் கொண்டு, வளர்ந்த நாடுகள் அதை கணிசமாக அதிகரிக்க வேண்டும், மேலும் பணக்கார நாடுகள் ஆதாரவளத்தை திரட்டும் பணியை தலைமை ஏற்று வழிநடத்த வேண்டும்.

இந்த வகையில், நவம்பர் 2022 இல் பாலியில் நடந்த ஜி20 உச்சிமாநாடு, வளர்ந்துவரும் நாடுகளுக்கு காலநிலை நிதியை வழங்குவதைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதை ஒத்துக்கொண்டது, மேலும் வளர்ந்துவரும் நாடுகளை ஆதரிக்க, ஒர் இலக்காக புதிய கூட்டு அளவாக நிர்ணயிக்கப்பட்ட இலக்கை (என்சிகியூஜி) ஆண்டுக்கு 100 பில்லியன் யுஎஸ் டாலர்கள் காலநிதிஎன்ற அடிப்படையில் இருந்து உயர்த்தவும் ஒத்துக்கொண்டன.

இந்தியா தன் தலைமையின் கீழ் காலநிலை நிதியான ஆண்டுக்கு 100 பில்லியன் யுஎஸ் டாலர் என்ற வரையறைக்கு மேல் உயர்த்த வளர்ந்த நாடுகளை வலியுறுத்தும். மேலும் இந்திய ஜி20 நாடுகளுடன் இணைந்து புதுப்பிக்கும் ஆற்றல் உட்பட, பூஜ்யம் மற்றும் குறைந்த உமிழ்வு ஆற்றல் உற்பத்தியை அதிகரிக்கப் பாடுபடும். இந்தியாவில் நடைபெறும் ஜி20 உச்சிமாநாடு வெப்பநிலை உயர்வை 1.5 டிகிரி செல்சியஸாக மட்டுப்படுத்தும் இலக்கினை வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காலநிலை மாற்றத்தின் விளைவுகளுகேற்ப தகவமைத்துக்கொள்ளல், மற்றும் அம்மாற்றத்தின் விளைவுகளின் பாதிப்பை குறைத்தல் என்கிற இவ்விரண்டிற்குமிடையில் ஒரு சமநிலையை அடைவதற்கான சூழலில், வளர்ந்த நாடுகள் குறைந்தபட்சம் வளர்ந்துவரும் நாடுகள் காலநிலை நிதியை காலநிலை மாற்றத்தின் விளைவுகளுகேற்ப தகவமைத்துக்கொள்ளும் வகையில் வளர்ந்த நாடுகள் கூட்டாக வழங்கும் நிதியை 2019ல் வழங்கியதன் இரட்டிப்பாக 2025யையொட்டி தர வேண்டும் என்ற பாலி கூட்டறிக்கை கூறியது இந்தியாவுக்கும் பிற வளர்ந்துவரும் நாடுகளுக்கும் கிடைத்த ஒரு வெற்றியாகும். காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக, காலநிலை நிதி, தொழில்நுட்ப மாற்றம் மற்றும் ஏழை மற்றும் வளர்ந்துவரும் நாடுகளின் உட்திறனை வலிமைப்படுத்துதலுக்கு பனக்கார நாடுகளிடம் இருந்து திடமான நடவடிக்கைகளை இந்தியா எதிர்பார்க்கிறது.

காலநிலை சிக்கலின் வெறும் அளவை கருத்தில் கொண்டால், நடவடிக்கை எடுக்க இன்னும் காலந்தாழ்த்த முடியாது என்பது தெள்ளதெளிவான ஒன்று. காலநிலை நிதியைப் பொறுத்தவரையில் வளர்ந்த நாடுகள் வாய்சொல்லோடு நிற்காமல் அதை நிறைவேற்ற அவர்களை வலியுறுத்துவதில் ஜி20 க்கு பெரும் பொறுப்பு இருக்கிறது. காலநிலை மாற்றத்தைத் தணிக்க, வளர்ந்த நாடுகள், நிதி, தொழிநுட்ப, மற்றும் திறன் உருவாக்க ஆதரவுகளை அளிக்க இந்தியா தன் தலைமைப் பொறுப்பில் இருந்து வலியுறுத்தும். இந்தியாவின் பார்வையில், பசுமைக்குடில் வாயு உமிழ்வில் வரலாற்றுரீதியான பொறுப்பு வாய்ந்த வளர்ந்த நாடுகள், கால நிலை மாற்றத்தை எதிர்க்க ஆதாரவளங்களைத் திரட்டுவதை முன்னெடுத்து தலைமை ஏற்கவேண்டும். காலநிலை மாற்றத்தின் விளைவுகளுகேற்ப தகவமைத்துக்கொள்ளல், மற்றும் அம்மாற்றத்தின் விளைவுகளின் பாதிப்பை குறைத்தல் என்கிற இவ்விரண்டிற்குமான திட்டங்களிடையே சமத்துவமான (நிதி) ஒதுக்கீடு இருக்க வேண்டும்.

# உணவு பாதுகாப்புக்காக ஜி20 ஒத்துழைப்பை மேம்படுத்தல், தினைவகைகளை பிரபலப்படுத்துதல்

கோவிட் 19 பெருந்தொற்றாலும், தொடர்ந்து ரஷ்ய-உக்ரைன் சிக்கலால் பொருள் வழங்கல் சங்கிலியில் ஏற்பட்ட இடையூறாலும், உணவுத் தட்டுப்பாடு ஒரு பெரும் உலகக் பிரச்சினையாக மாறிவிட்டது. இந்தியாவின் ஜி20 தலைமைத்துவத்திலும் இதை முன்னிறுத்தி. உணவுச் சிக்கல் வளர்ந்த மற்றும் வளர்ந்துவரும் நாடுகளையும் பாதிப்பதால், உலக உணவுப் பாதுகாப்பிற்கு வலுவூட்ட உலகளாவிய ஒத்துழைப்பை மேம்படுத்தி வடக்கு-தெற்கு பிரிவைக் கடந்து உதவி செய்வதற்கு இந்தியா தனது ஜி20 தலைமைப் பொறுப்பைப் பயன்படுத்தும். இந்த சிக்கலை பொறுத்தவரையில், இந்தியா தனது 1.3 பில்லியன் குடிமக்களுக்கு உணவுப் பாதுகாப்பை வழங்கும் வலுவான நிலையில் இருப்பதோடு, பல வளர்ந்துவரும் நாடுகளுக்கு உணவு வழங்குநராகவும் விளங்கி வருகிறது. தெற்கில் இருந்து தெற்கிற்காக என்ற உணர்வோடு இந்தியா ஆப்கானிஸ்தானுக்கு 50,000 மெட்ரிக் டன் கோதுமையையும், பல்வேறு மருந்துகளையும், தடுப்புமருந்துகளையும், ஸ்ரீலங்காவுக்கு 3.8 பில்லியன் யுஎஸ் டாலர் அளவிற்கு எரிபொருள், இன்றியமையா பொருட்கள் மற்றும் வணிகநிதி சார் தேவைகளுக்காக, கடனுதவியாகவும், மியன்மார்க்கு 10,000 மெட்ரிக் டன் உணவு மற்றும் தடுப்பூசிகளையும் வழங்கியுள்ளது.



பெருந்தொற்று மற்றும் ரஷ்ய-உக்ரைன் சிக்கல் ஆகிய இரட்டைக் கொடும் விளைவுகளால் உலக வழங்கல் சங்கிலி நிலைகுலைந்த நிலையில். உரங்கள் மற்றும் உணவு தானியங்களின் வழங்கல் சங்கிலியை நிலையாகவும் உறுதியாக்குவதாகவும் பராமரிக்கும்படி ஜி20 இன் இந்தியத் தலைமை உலக சமுதாயத்தை ஒன்றுதிரட்டும். குறிப்பாக, உரங்கள் தடையின்றி வழங்கப்படுவதற்கு இந்தியா முன்னுரிமை அளிக்கும். "இன்றைய உரத்தட்டுப்பாடு, நாளைய உணவுச் சிக்கல், என்பதால் இதற்கு ஒரு தீர்வு உலகத்திடம் இருக்காது," என்று 15-16 நவம்பர் 2022 பாலி ஜி20 உச்சிமாநாட்டில் பிரமர் மோடி கூறினார்.

உலக உணவுச் சிக்கலைத் தீர்க்க இந்தியா உலக சந்தைகளுக்கு ரஷ்ய உணவுப்பொருட்களையும் உரத்தையும் வழங்கும் கருப்புக் கடல் தானிய முன்முயற்சியை (Black Sea Grain Initiative) ஆதரித்தது. உக்ரைன் மற்றும் ரஷ்ய கூட்டமைப்பில் இருந்து தடையின்றி தானியம், உணவுப்பொருட்கள் மற்றும் உரங்கள்/உள்ளீடுகள் வழங்கப்படுவதை இது உறுதிசெய்து உலகளவில் உணவுப் பாதுகாப்பு இல்லமல் இருக்கும் நிலையையும், வளர்ந்துவரும் நாடுகளில் பசியையும் போக்கி சிக்கலை குறைக்கும். இதைப் பொறுத்தவரையில் உணவு மற்றும் உர ஏற்றுமதியைத் தடைசெய்வதை அல்லது கட்டுப்படுத்துவதை இந்தியா எதிர்க்கிறது.

சவாலான சூழல்களிலும் உணவு வழங்கல் சங்கிலியைச் செயல்பட வைக்க ஜி20 தலைமைத்துவத்தின் கீழ் இந்தியா சர்வதேச ஆதரவைத் திரட்டும். தேவையில் இருக்கும் அணைவருக்கும் உணவு மற்றும் உணவுப் பொருட்களின் அணுகல், வாங்கும் திறன், மற்றும் நிலைத்தன்மையை உறுதிப்படுத்தி உணவுப் பாதுகாப்பின்மையை தீர்க்கும் உறுதிப்பாட்டை, குறிப்பாக உலகின் தெற்குப் பகுதி நாடுகளில், இந்தியா காட்டியுள்ளது.

உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்த, விவசாயத்தில் மேலும் ஒத்திசைவை உருவாக்கும் கண்டுபிடிப்புகள், உணவுத் தொழில்நுட்பம் மற்றும் உயிரியதொழில்நுட்பம் ஆகியவையே இந்தியாவிற்கு முக்கிய முன்னுரிமையாக இருக்கும்.

முன்னோக்கிப் பார்த்து, நிலைத்த உணவு பாதுகாப்பிலும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதிலும் இந்தியா கவனம் செலுத்தும். உணவுப் பாதுகாப்புத் துறையில் இந்தியாவுடனான சர்வதேச ஒத்துழைப்பில் காலநிலை மீட்சியும் திறம்பட பயன்படுத்தும் (ஸ்மார்ட்) விவசாயமும் முக்கிய விஷயங்களாக இருக்கும். தலைமைப் பொறுப்பில் இருக்கும் இந்தியா தினைவகைகள் போன்ற சத்துமிகுந்த மரபுவழி தானியங்களை மறுபடியும் மக்களிடம் பிரபலப்படுத்தும். இதைப் பொறுத்தவரையில், இந்தியா தன் தலைமையின் கீழ் மிக உற்சாகத்துடன் உலக தினை ஆண்டைக் கொண்டாட பல நிகழ்வுகளை ஒழுங்குசெய்யும்.

உணவுப் பாதுகாப்பு என்பது ஐநா-வின் வளங்குன்றா வளர்ச்சிக்கான இலக்குகளில் ஒன்றாக இருப்பதால், உலக உணவுத் திட்டத்தை ஜி20 நாடுகள் ஆதரிப்பது முக்கியம் ஆகும். அனைவருக்கு உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்தியா குடிமக்களை மைய*ப்படுத்தி "ஒரு நாடு ஒரே உணவு வழங்கல் அட்டை திட்டம்" என்ற முன்முயற்சியை அறிமுகப்படுத்தியுள்ளது.

உலகின் மிகப்பெரிய, அனைவருக்கும் உணவு கிடைத்தல் குறித்த முன்முயற்சி உட்பட உணவுப் கிடைக்கும் வகையில் இந்தியா அதன் புகழுக்கு சிறப்பான சாதனைகளைப் படைத்துள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்கமாக வழங்குவதற்கும் அதிகமாக பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் (பிஎம்ஜிகேஏஒய்) கீழ் மாதந்தோறும் இந்திய அரசு ஒரு நபருக்கு 5 கிலோ உணவுதானியங்களை வழங்குகிறது. கொரோனா பெருந்தொற்று உச்சத்தில் இருக்கும்போது இத்திட்டம் 800 மில்லியனுக்கும் மேலான இந்தியர்களுக்கு உணவுப்பாதுகாப்பை வழங்கியது. இந்தியாவில் எந்த ஒருவரும் மிக அதிகமான வறுமை நிலையை அடையாமல் தடுத்ததையும், அளித்துவந்த உணவை இரட்டிப்பாக்கியதால் கோவிடால் ஏற்பட்ட வருமான இழப்பு அதிர்வுகளை அது தாங்கிகொள்ள உதவியதையும் சர்வதேச நிதியம் ( ஐஎம்எஃப்) பாராட்டியது.

உலக உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தும் சர்வதேச எல்லைகடந்த அணுகலைப் பொறுத்தவரையில், ஜி20 நாடுகளை ஒப்பிடும்போது இந்தியாவிடம் மிக அதிகமான விவசாய மனிதசக்தி உள்ளது; இதைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியை மேம்படுத்தலாம். மேலும், இந்திய விவசாயத் திறன் உலக உணவு பாதுகாப்பை அதிகரிக்க முக்கிய பங்கு வகிக்க முடியும். உலகின் சில நாடுகளில் பாலாடைக்கட்டி, ஆலிவ் போன்ற மரபுவழி விவசாய பொருட்களுக்கு புதிய உயிர்ப்பைக் கொடுக்க இந்திய விவசாய திறன்கள் உதவியுள்ளன.

அதிக அளவில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களும் விவசாய தொழிநுட்ப நிறுவனங்களும் தோன்றுவதால், பூஜ்ய-உழுதல் விவசாயம், துல்லிய விவசாயம், ஒப்பந்த விவசாயம், சொட்டுநீர்ப் பாசனம் ஆகிய குறைந்த செலவு விவசாய தொழில்நுட்பங்களை எவ்வாறு ஊக்குவிப்பது என்ற தன் அறிவையும் தொழில்நுட்ப அறிதல்களையும் பகிர இந்தியாவுக்கு வாய்ப்பு உள்ளது.

பசியையும் ஊட்டச்சத்துக் குறைபாட்டையும் கையாள விவசாயத்தை அதிக அளவில் சூழலுக்கு ஏற்றதாக மாற்றும் ஜி20 இன் முயற்சிகளை மேம்படுத்துவது முக்கியம். இதைப் பொறுத்தவரையில், நேர்மறையான ஊட்டச்சத்து பலன்களைப் பெறுவதை உறுதிசெய்ய பூச்சிக்கொல்லி, களைக்கொல்லி மற்றும் அசுத்தங்கள் இல்லாத பல்வேறு விவசாய தொழில்நுட்பங்களையும் முறைகளையும் தழுவிக்கொள்ள சர்வதேச ஒத்துழைப்பு அவசியம்.



# உலக நிதி ஆளுகையை ஜனநாயகப்படுத்துதல்: 21 ஆம் நூற்றாண்டு எதார்த்தற்கேற்றாப்போல் தகவமைத்துகொள்ளுதல்

இரண்டாவது உலகப் போருக்குப் பின் உருவாக்கப்பட்ட உலக ஒழுங்கமைப்பு பழமையுற்று சோர்வுற்றுள்ளது. உலக சிக்கல்களுக்கு எதிர்வினையாற்றும் உலக நிறுவனங்களின் திறனை எதிர்மறையாக இது பாதித்துள்ளது. இந்தச் சூழலில், உலக நிதி ஆளுகை நிறுவனங்களை அதிக ஜனநாயகமானதாகவும் உலக ஒழுங்கமைப்பில் தற்போது நிகழ்ந்துவரும் மாற்றங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் மாற்றுவது ஜி20 தலைமைத்துவத்தில் இருக்கும் இந்தியாவின் ஒரு பெரும் முன்னுரிமை ஆகும். உலக வங்கி மற்றும் ஐஎம்எஃப் போன்ற நிறுவனங்கள் தொடர்ந்து மேற்கின் பிடியில் அவற்றின் கோட்டைகளாகத் திகழ்கின்றன; பொருத்தமானவைகளாக இருக்க இவை வளர்ந்துவரும் நாடுகளுக்கு அதிகப் பிரதிநிதித்துவத்தையும் முக்கியத்துவத்தையும் அளிக்க வேண்டும். மேம்பாட்டு வங்கிகளை உள்ளடக்கிய பலதரப்பு நிறுவனங்களும், உலக நிதியுதவி நிறுவனங்களும் வளர்ந்துவரும் பொருளாதார நாடுகளைக் கருத்தில் கொண்டு உடனடியாக சீர்திருத்தப்பட வேண்டும் இந்தப் பின்னணியில், உலக நிர்வாக நிறுவனங்களின் விரைவான சீர்திருத்தம் ஜி20 ஐ தலைமை ஏற்றிருக்கும் இந்தியாவின் முன்னுரிமைகளில் ஒன்றாகும்.

உக்ரைன் சிக்கலைத் தொடர்ந்து எழுந்த அத்தியாவசியப் பொருட்களின் சிக்கலும் உலக வழங்கல் சங்கிலியின் நிலைகுலைவும் உலக ஒழுங்கமைப்பினை சீர்திருத்ததுவதன் வேகத்தை மிகவும் அவசரமாக அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது. பாலியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் மோடி சிக்கலின் தன்மையை விவரமாக வெளிக்கொண்டுவந்து பன்முக நிறுவனங்களைச் சீர்திருத்த வேண்டிய தேவையை வலியுறுத்தினார். “ஒவ்வொரு நாட்டின் ஏழைக் குடிமகனும் சந்திக்கும் சவால்கள் கடுமையாக இருக்கின்றன. ஒவ்வொரு நாள் வாழ்க்கையும் அவர்களுக்குப் போராட்டமாக இருக்கிறது. இருமுனை தாக்குதலைக் கையாளும் நிதித்திறன் அவர்களுக்கு இல்லை. இருமுனை தாக்குதலால் அதைக் கையாளும் நிதித் திறன் அவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது,” என்று அவர் கூறினார். “ஐ.நா. போன்ற பலதரப்பு நிறுவனங்கள் இந்த பிரச்சினைகளில் வெற்றி பெறவில்லை என்பதை ஒத்துக்கொள்ள நாம் தயங்கக்கூடாது. மேலும் அவற்றில் நாம் பொருத்தமான சீர்திருத்தங்களைச் செய்வதில் தோல்வி அடைந்துவிட்டோம்,” என்று கூறினார் பிரதமர் மோடி. இந்தியாவின் பார்வையில், கோவிட்டு பெருந்தொற்றுக்கு பின்னான வேகமான மீட்சிக்கான சிறந்த உலக ஒழுகமைப்பினை உறுதிசெய்ய பலதரப்பு அமைப்புகளை சீர்திருத்தவேண்டியது அவசியமாகும்.

தற்போது ஐஎம்எஃப் மற்றும் உலக வங்கியின் ஆளுகை அமைப்பு விசித்திரமாக உள்ளது. அவைகள் ஆட்சிக்குழுவால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அதில் அவற்றின் உறுப்பு நாடுகளின் பொருளாதார அளவைப் பொறுத்து வாக்கு விகிதாசச்சாரம்(வல்லமை) உள்ளது. இது ஒரு கடுமையான சமச்சீரற்ற நிலைக்கு வழிவகுத்துள்ளது: யுஎஸ் அரசின் வாக்கின் பங்கு 16% அதே சமயத்தில் 100 மில்லியன் மக்கள் வாழும் எத்தியோப்பிய போன்ற ஒரு நாட்டின் வாக்கின் பங்கு ஐஎம்எஃபின் ஓட்டுகளில் வெறும் 0.09%. உலக வங்கி எப்போதும் ஒரு யுஎஸ் அமெரிக்கராலும் மற்றும் ஐஎம்எஃப் ஒரு ஐரோப்பியராலும் வழிநடத்தப்படுகிறது. இரு அமைப்புகளின் தலைமை அலுவலகமும் அமெரிக்காவின் தலைநகரத்தில் உள்ளன. வளர்ச்சியுற்ற பொருளாதார நாடுகளில் இருந்தே பல பொருளாதார நிபுணர்களைப் பணியமர்த்துகின்றன. இந்த ஆளுகை அமைப்பு வளர்ந்த நாடுகளுக்கே சாதகமாக இருக்கிறது, இதை மாற்ற வேண்டிய அவசர தேவை இருக்கிறது.

ஒதுக்கீட்டை அடிப்படையாகக் கொண்ட போதுமான வளங்களைப் பெற்ற ஐஎம்எஃப்-ஐ மையப்படுத்திய ஒரு வலிமையான மற்றும் பலனளிக்கும் உலக நிதி பாதுகாப்பு வலைப்பின்னலைப் பராமரிப்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. டிசம்பர் 15, 2023 இல் நடைபெறும், ஒரு புதிய ஒதுக்கீட்டு சூத்திரத்தை வழிகாட்டியாக உள்ளடக்கிய 16வது பொது ஒதுக்கீட்டு மறுஆய்வின் கீழ் ஐஎம்எஃப் ஆளுகை சீர்திருத்த செயல்முறையை முன்னெடுத்துச் செல்ல இந்தியா தொடர்ந்து அழுத்தம் அளிக்கும். நிலைத்த முதலீட்டுப் பாய்வினை (capital flows) ஊக்குவித்து, உள்நாட்டு பண முதலீட்டுச் சந்தைகளை மேம்படுத்துவதை உள்ளடக்கிய சர்வதேச நிதி கட்டமைப்பின் நீண்ட கால நிதி மீள்திறனை வலிமைப்படுத்துவதற்காக ஜி20 நாடுகள் பணியாற்றுவது எதிர்பார்க்கப்படுகிறது.

உலக ஒழுங்மைப்பை மறுபரிசீலனை செய்யும் இந்தியாவின் அணுகுமுறை சீர்திருத்தப்பட்ட பன்முகத்தன்மை என்ற கருத்துருவால் உயிர்ப்பிக்கப்பட்டது. இது முதன் முறையாக 2018 இல் தென் ஆப்பிரிக்காவின் ஜோகனேஸ்பர்க்கில் நடைபெற்ற பிரிக்ஸ் (BRICS) உச்சி மாநாட்டின் தலைவர்களின் கூட்டத்தில் பிரதமர் மோடியால் கூறப்பட்டது. சமகால எதார்த்தங்களை பிரதிபலிக்காத பலதரப்பு அமைப்புகளில் சீர்திருத்தங்கள் செய்து, ஆளுகையில் பிற பெரிய உருவாகிவரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளுக்கு அதிக பங்கு அளிக்கவேண்டும் என்பதே இதன் கருத்து. இந்தக் கருத்துக்கு ஒத்திசைவாக, ஜி20 உட்பட உலக அரங்குகளில் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான உலக ஆளுகைக் கட்டமைப்புகளில் சீர்திருத்தங்களைப் இந்தியா தொடர்ந்து பரிந்துபேசி வருகிறது. பல வழிகளில் ஜி20 பலதரப்பு அமைப்புகளில் அதிக பிரதிநிதித்துவம் கொண்ட அமைப்பாக இருந்துவருகிறது. இதில் வளர்ந்த மற்றும் வளரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகள் உள்ளன. ஆகவே பல்தரப்பு நிறுவனங்களிலும் வங்கிகளிலும் சீர்திருத்தங்களைத் தேட திறன் கொண்டதாக இருக்கிறது. வளரும் நாடுகள் ஜி20 தலைமையை 2025 வரை தொடர்ந்து வகிக்கும் இந்நிலை – 2022 இல் இந்தோனேஷியா, 2023 இல் இந்தியா, 2024 இல் பிரேசில், மற்றும் 2025 இல் தென் ஆப்பிரிக்கா எனத் தொடரும். சர்வதேச நிதி நிறுவனங்களில் முக்கிய மாற்றங்களை அடைவதற்கு இணைந்து வலியுறுத்தும் ஒரு வாய்ப்பான நேரமாக இது அமைகிறது. சர்வதேச ஆளுகை நிறுவனங்களில் முடிவுகளை வலியுறுத்த ஜி20 தலைமைத்துவம் இந்தியாவுக்குக் கிடைத்துள்ள ஒரு தனித்துவமான வாய்ப்பாகும்.

இது தொடர்பாக, உலக நிதி ஆளுகையில் துணிவான புத்தாக்கங்கள் அவசரமாகத் தேவைப்படுகின்றன. ப்ரெட்டான் வுட்ஸ் நிறுவனங்கள் அதாவது சர்வதேச நிதியம், உலகவங்கி 21 ஆம் நூற்றாண்டில் தேவைக்கேற்றப்ப இல்லை என்றும் புதிய புவி-பொருளியல் எதார்த்தங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை என்ற கருத்தொற்றுமை வளர்ந்து வருகின்றன. பன்முக நிதி நிறுவனங்களின் முறைநிலை தன்மையை மேம்படுத்துவது உலக நலனுக்கானது மட்டுமல்லாமல் ஐஎம்எஃப் மற்றும் உலக வங்கியின் பெரும் பங்குதாரர்களுக்கும் சேர்த்துதான்

.




# வழங்குன்றா வளர்ச்சிக்கான இலக்குகளை (எஸ்டிஜி) எட்டுவதை வேகப்படுத்துதல்: உலகை வாழ்வதற்கு சிறந்த இடமாக மாற்றுதல்

ஐக்கிய நாடுகளின் நிலைத்த மேம்பாட்டு செயல்த்திட்ட்டம் 2030-ஐ நிறைவேற்றுவதற்கான நேரம் நெருங்கி வந்துகொண்டிருக்க, எஸ்டிஜி-களை எட்டுவதை வேகப்படுத்துவது ஓர் அவசர தேவையாக இருக்கிறது. அவப்பேறாக, கோவிட்-19, உக்ரைன் – ரஷ்ய போர், சமமற்ற பொருளாதார வளர்ச்சி மற்றும் அதிக விலைவாசி உயர்வு ஆகியவற்றால் எஸ்டிஜி-களை எட்டுவது குறித்த முன்னேற்றம் மந்தமாகி விட்டது. பாலியில் நடந்த ஜி20 உச்சிமாநாட்டின் போது, ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோ கட்டரஸ், எஸ்டிஜி-யில் இருந்து வரும் 'அவசர அழைப்பு' க்கு ஜி20 தலைவர்கள் எதிர்வினையாற்றி, காலநிலைச் சிக்கலைக் கையாளுதல், பஞ்சத்தையும் பட்டினியையும் தடுத்தல், ஆற்றல் மாற்றத்தை வலுப்படுத்தல் மற்றும் டிஜிட்டல் உருமாற்றத்தை ஊக்குவித்தல் ஆகியவற்றில் வளர்ந்து வரும் நாடுகளின் அரசுகளை ஆதரிக்குமாறு அழைப்புவிடுத்தார்.

இந்தப் பின்னணியில், இந்தியா ஜி20 தலைமைப் பொறுப்பில் இருக்கும்போது எஸ்டிஜி-களை எட்டுவதை வேகப்படுத்துவதில் கவனம் செலுத்தும். வறுமை, உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, பெண்களை அதிகாரப்படுத்துதல், வேலைவாய்ப்பு மற்றும் காலநிலை மாற்றம் போன்ற ஒன்றோடொன்று இணைந்துள்ளவற்றை எஸ்டிஜி-கள் உள்ளடக்கியுள்ளன.

எஸ்டிஜி-கள் அல்லது உலக இலக்குகள் என்பதில் 17 ஒன்றோடொன்று இணைந்துள்ள இலக்குகள் உள்ளன. இவை "இப்போதைக்கும் எதிர்காலத்திற்கும் மக்களுக்கும் பூமிக்கும் அமைதிக்கும் செழிப்புக்குமான பகிரப்பட்ட வரைபடங்கள்" ஆகும். இந்த எஸ்டிஜி-கள் 2015 இல் ஐக்கிய நாடுகள் பொது சபையால் (யுஎன் - ஜிஏ) உருவாக்கப்பட்டு 2030 நிரல் என்று அழைக்கப்பட்ட யுஎன் – ஜிஏ தீர்மானத்தில் சேர்க்கப்பட்டன. அந்த 17 எஸ்டிஜி-கள்: வறுமை இன்மை, பசியின்மை, சிறந்த சுகாதாரம் மற்றும் நல்வாழ்க்கை, தரமான கல்வி, பாலின சமத்துவம், சுத்தமான தண்ணீரும் சுகாதாரமும், மலிவான மற்றும் சுத்தமான ஆற்றல், கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி, தொழிற்சாலை, கண்டுபிடிப்புகள் மற்றும் கட்டமைப்புகள், சமத்துவமின்மை குறைப்பு, நிலைத்த நகரங்களும் சமுதாயமும், பொறுப்பான நுகர்வும் உற்பத்தியும், காலநிலை நடவடிக்கை, தண்ணீரின் கீழ் உயிர்கள், நிலத்தின் மேல் உயிர்கள், அமைதி, நீதி, மற்றும் வலிமையான நிறுவனங்கள், இலக்குகளுக்கான பங்காளிகள்.

இந்தியாவின் மேம்பாட்டு செயல்திட்டத்தில் ஒன்றுக்கொன்று இணைந்த உலகின் மேல், அதற்குள்ள நம்பிக்கையிலும் எஸ்டிஜி-கள் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கின்றன. இது "வசுத்தைவ குடும்பகம்" என்ற கருத்தால் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விழுமியங்கள்தான் இந்தியாவின் ஜி20 தலைமைத்துவத்தை உயிர்ப்பிக்கின்றன. ஐக்கிய நாடுகளில் செயல்திட்டம் 2030-ஐ உருவாக்குவதில் இந்தியா முக்கிய பங்கை வகித்தது. நாட்டின் தேசிய மேம்பாட்டு செயல்திட்டத்தில் பெரும்பகுதி நிலைத்த மேம்பட்டு இலக்குகளில் (எஸ்டிஜி-கள்) பிரதிபலித்தன. இந்த அர்த்தத்தில் எஸ்டிஜி-களை எட்டுவதில் உலகின் முன்னேற்றம் பெரும்பாலும் இந்தியாவின் முன்னேற்றத்தையே சார்ந்துள்ளது.

எஸ்டிஜி-களை மேம்படுத்தி அவற்றிற்கு நிதியளிப்பதை பன்முகப்படுத்தும் முயற்சிகளே இந்தியாவின் மைய உந்துதலாக இருக்கும், குறிப்பாக மிகக்குறைந்த அளவு மேம்பட்ட நாடுகள் (எல்டிசிஎஸ்) மற்றும் சிறு தீவுகளான வளர்ச்சியுறும் நாடுகளுக்காக (எஸ்ஐடிஎஸ்). இந்த வகையில், எஸ்டிஜி நிதிக்காக, உலக வங்கி, ஐஎம்எஃப் மற்றும் உலக வர்த்த அமைப்பு (டபுள்யூடிஓ) போன்ற பன்முக நிறுவனங்களை மறுகட்டமைப்பு செய்ய வேண்டிய தேவையை பற்றிய ஓர் ஒருங்கிணைந்த பார்வை வளரும் நாடுகளுக்கு மத்தியில் எழுந்து வருகிறது. செயலூக்கத்துடன் எஸ்டிஜி-களுக்கான நிதியை அதிகரித்து அவைகளை வேகப்படுத்த தனியார் துறையின் பெரும் பங்கைப் பற்றி இந்தியா பரிந்து பேசிவருகிறது. எஸ்டிஜி-களை அடைய குறைந்த மற்றும் மத்திய வருமான நாடுகளுக்கு தனியார் முதலீடுகளைத் திரட்டுவது உட்பட புத்தாக்க முதலீடுகள் மூலம் மேலும் முதலீடுகளை அளிப்பதை இந்தியா ஆதரிக்கிறது.

எஸ்டிஜி-களை துரிதப்படுத்துவது கட்டாயமான ஒன்றாகிவிட்டது. இந்தியா 2015–2019 இல் வேகமாக வளரும் நாடுகளிக்கிடையே, குறைந்த-மத்திய வருமான நாடுகளை விட வேகமாக வளர்வதாலும் ஜி20 நாடுகளின் மத்தியில் தனித்து நிற்பதாக பிரதமரின் ஆலோசனைக் குழுவின் ஆய்வு கூறுகிறது.

முன்னோக்கி பார்க்கும்போது, இந்தியா ஜி20 தலைமைத்துவத்தின் கீழ் எஸ்டிஜி-களின் நிதியை மேம்படுத்த முன்னேறிய மற்றும் வளர்ந்துவரும் பொருளாதார நாடுகளோடு நெருக்கமாகப் பணிபுரியும். உள்நாட்டு வரி வருமானங்களை அதிகரித்தல், சர்வதேச நிதி நிறுவனங்கள் (டிஎஃப்ஐ-கள்); மற்றும் மிகவும் கடன்பட்ட கடன்தாரர்களின் கடனை மறுகட்டமைப்பு செய்வது போன்ற பல வழிகளின் மூலம் இது திரட்டப்படும். நீண்ட கால வளர்ச்சியை ஆதரிக்கவும் அதை நிலைத்ததாகவும் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும் பசுமையானதாகவும் மாற்ற இந்தியா பொது முதலீடுகளையும் கட்டமைப்பு சீர்திருத்தங்களையும் ஊக்குவிப்பதிலும், தனியார் முதலீடுகளை ஊக்குவிப்பதிலும், உலக வழங்கல் சங்கிலியை மீளமைப்பதிலும் கவனம் செலுத்தும்.

ஜி20 கூட்டங்களில் நாட்டின் சில சாதனைகளை இந்தியா எடுத்துக்காட்டும். பிற நாடுகளின் அனுபவங்களையும் சிறந்த நடைமுறைகளையும் பரிமாறிக்கொள்வதில் கவனம் செலுத்தும். பூமியை வாழ்வதற்கு சிறந்த இடமாக மாற்ற அதை அனைத்தையும் உள்ளடக்கிய செழிப்பானதாக உருவாக்கி வடிவமைக்கும் இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையின் ஒரு பகுதியாக எஸ்டிஜி-களை வேகப்படுத்துவது அமைகிறது.

# சொற்களஞ்சியம்

**ஏசிடி - துரிதப்படுத்தி** (ACT-Accelerator): கோவிட்–19 அணுகல் கருவிகள் (ACT). கோவிட்–19 சோதனைகள், சிகிச்சை மற்றும் தடுப்பு மருந்துகளின் மேம்பாடு, தயாரிப்பு மற்றும் சம அணுகலைத் துரிதப்படுத்தும் உலகளாவிய ஒத்துழைப்பின் ஒரு முக்கிய சட்டகமே ஆக்சிலெரேட்டர்.

**ஆடிஸ் அபாபா செயல் நிரல்** (Addis Ababa Action Agenda (AAAA): நிலைத்த மேம்பாட்டுக்கான 2030 நிரலை நடைமுறைப்படுத்துவதை ஆதரிக்க ஏஏஏஏ ஒரு வலுவான அடித்தளத்தை உருவாக்குகிறது. மேலும் அது அனைத்து நிதி பாய்வையும் கொள்கைகளையும், பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் முன்னுரிமைகளுடன் இணைப்பதன் மூலம் நிலைத்த மேம்பாட்டுக்கு நிதியுதவி அளிப்பதன் வாயிலாக ஒரு புதிய உலகளாவிய சட்டகத்தையும் வழங்குகிறது.

**விவசாயச் சந்தை தகவல் அமைப்பு** (Agriculture Market Information System (AMIS): விவசாயச் சந்தை தகவல் அமைப்பு (ஏஎம்ஐஎஸ்) என்பது ஓர் உள்–முகவாண்மைத் தளம். இது சிக்கலான நேரங்களில் உணவுச் சந்தையின் வெளித்தன்மையை மேம்படுத்தி சர்வதேசக் கொள்கை ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கிறது. இது ஜி20 க்கு பிரான்ஸ் தலைமை வகித்தபோது உருவாக்கப்பட்டது. கோதுமை, சோளம், அரிசி மற்றும் சோயாபீன்ஸ் போன்ற பயிர்கள் இந்த முன்னெடுப்பில் உள்ளடங்கியுள்ளன.

**வேளாண் உணவு உலக மதிப்புச் சங்கிலிகள்** (Agro-Food Global Value Chains): இவை உலகம் முழுவதும் உள்ள உணவு மற்றும் நார் உற்பத்தியாளர்களை நுகர்வோருடன் இணைத்து உணவை நிலையாக வழங்கவும் அதிக அளவில் நுகர்வோரை அறிமுகப்படுத்தவும் உதவி அதே வேளையில் உற்பத்தியாளர்களுக்கு வருமானம் உருவாக்கித் தருகிறது.

**அண்டார்ட்டிக் ஒப்பந்த அமைப்பு** (Antarctic Treaty System): அண்டார்ட்டிக் ஒப்பந்த அமைப்பு என்பது அண்டார்ட்டிக்கில் உள்ள நாடுகளுக்கு இடையில் உறவை முறைப்படுத்த உருவாக்கப்பட்ட சிக்கலான ஏற்பாடுகளின் ஒரு தொகுதியாகும். 1 டிசம்பர் 1959 இல் வாஷிங்டன் டி சி –யில் கையொப்பமிடப்பட்ட அமைப்பின் மையமாக அண்டார்ட்டிக் ஒப்பந்தம் உள்ளது; இது 23 ஜூன் 1961 இல் நடமுறைக்கு வந்தது.

**அன்டால்யா இளைஞர் இலக்கு** (Antalya Youth Goal): அன்டால்யா இளைஞர் இலக்கு என்பது, 2015 இல் துருக்கியில் உள்ள அன்டால்யாவில் ஜி20 நாடுகள் ஒத்துக்கொண்ட இலக்கைக் குறிக்கிறது: “அவர்களுடைய நாட்டில் தொழிலாளர் சந்தையில் இருந்து நிரந்தரமாக விடப்பட்டு விடக்கூடிய ஆபத்தில் இருக்கும் இளைஞர்களின் எண்ணிக்கையை 2025 ஆண்டுக்குள் 15% ஆகக் குறைத்தல்”.

**அடிப்படை சுருக்கம் மற்றும் லாப மாற்றுதல்** **(Base Erosion and Profit Shifting (BEPS):** பிஇபிஎஸ் என்பது, பல்வேறு பொருளாதார நாடுகளின் வரிவிதிப்பு விதிகள் மற்றும் நெறிமுறைகளில் இருக்கும் இடைவெளிகள் மற்றும் வேறுபாடுகளை பயன்படுத்தி வரி ஏய்ப்புச் செய்ய பன்னாட்டு நிறுவனங்களால் (எம்என்இஎஸ்) கடைப்பிடிக்கப்படும் வரி திட்டமிடல் உத்திகள்.

**சுழற்சிமுறை பொருளாதாரம்** **(Circular Economy):** பொருட்களை கழித்து எறிந்துவிட்டு புதிய ஆதாரங்களைப் பயன்படுத்துவதுக்குப் பதிலாக அவற்றை மறுசுழற்சி செய்வதை ஊக்குவிக்கும் சந்தைகளை உள்ளடக்கியதே சுற்றுப் பொருளாதாரம் ஆகும். இந்தப் பொருளாதாரத்தில் துணிகள், பழைய உலோகங்கள், பயனற்ற மின்னணுப் பொருட்கள் ஆகிய அனைத்து வகையான கழிவுகளும் பொருளாதார சுழற்சிக்குள் திருப்பிக்கொண்டுவரப்பட்டு மிகவும் திறனோடு பயன்படுத்தப்படுகின்றன.

**ஆப்பிரிக்காவைற்காக செயல்திட்டம்** **(Compact with Africa (CwA):** ஜெர்மனி ஜி20 இன் தலைமைப் பொறுப்பில் இருக்கும் போது ஆப்பிரிக்காவில் உள்கட்டமைப்புத் துறையை உள்ளடக்கிய தனியார் முதலீட்டை ஊக்கப்படுத்துவதற்காக இது முன்னெடுக்கப்பட்டது. பெருந்தொழில், வணிகம் மற்றும் நிதியுதவிச் சட்டகத்தைக் குறிப்பிடும் அளவுக்கு மேம்படுத்துவதன் மூலம் ஆப்பிரிக்க பொருளாதாரத்துக்குள் தனியார் முதலீட்டைக் கவர்ந்திழுப்பதை அதிகரிப்பதே சிடபுள்ஏ –வின் முக்கிய நோக்கம்.

**கோவேக்ஸ்** **(COVAX):** ஆக்ட் ஆக்சிலேட்டரின் தடுப்புமருந்து தூண் கோவேக்ஸ் ஆகும். கோவிட்-19 தடுப்பு மருந்துகளை உருவாக்கி உற்பத்தி செய்வதை வேகப்படுத்தி உலகின் அனைத்து நாடுகளிலும் சமமாக அதைக் கிடைக்கச் செய்வதுதான் கோவேக்சின் நோக்கம் ஆகும்.

**காலநிலை நிதி** **(Climate Finance) :** காலநிலை மாற்றங்களைத் தணிப்பது மற்றும் தழுவல் செயல்பாடுகளை ஆதரிக்க பொது, தனியார் மற்றும் மாற்று ஆதாரங்களைத் தேடும் உள்ளூர், தேசிய அல்லது நாடுகள் கடந்து திரட்டப்படும் நிதியே காலநிலை நிதியாகும். உமிழ்வைத் தடுத்து காலநிலை மாற்றத்தைத் தழுவிக்கொள்ள வளர்ந்துவரும் நாடுகளுக்கு உதவ வளர்ந்த நாடுகள் ஆண்டுதோறும் காலநிலை நிதியாக யுஎஸ் டாலர் 100 பில்லியனைத் திரட்ட ஒத்துக்கொண்டன.

**பெருநிறுவன ஆளுகை** **(Corporate Governance) :** பொருளாதாரத் திறன், நிலைத்த வளர்ச்சி மற்றும் நிதி நிலைத்தன்மையை ஆதரிக்கும் நோக்கோடு பெருநிறுவன ஆளுகைக்காக கொள்கையை உருவாக்குபவர்கள் சட்ட, முறைப்படுத்தும் மற்றும் நிறுவன சட்டகத்தை மதிப்பீட்டு மேம்படுத்த இது உதவுகிறது.

**ஊழல் குறித்த நல்நடத்தைகளுக்கான தொகுப்பு** **(Compendium of Good Practices on Corruption):** ஊழல், ஊழல் ஆபத்தின் அளவை அளத்தல், மற்றும் ஊழல் எதிர்ப்பு கொள்கைகளின் செயல்திறன் ஆகியவற்றைப் பற்றிய தரமான (செல்லுபடியாகும், நம்பந்தகுந்த, நடவடிக்கை எடுக்கக்கூடிய போன்றவை) தரவை கொண்டிருப்பதற்கு இது தேசிய அனுபவத்தின் மேல் கவனம் செலுத்துகிறது.

**கார்பன் பிடித்துவத்தல், பயன்பாடு மற்றும் கிட்டங்காக்கல்** **(Carbon Capture, Utilization and Storage (CCUS):** உலகளாவிய ஆற்றலையும் காலநிலை இலக்குகளையும் எட்ட பல்வேறு பங்குகளை ஆற்றக்கூடிய தொழில்நுட்பங்களின்தொகுப்பை சிசியுஎஸ் குறிக்கிறது.கார்பன் டையாக்சைடு உமிழ்வைப் பிடித்து ஒன்றில் அதை கட்டுமானப் பொருட்கள் போன்றவற்றை தயாரிக்கப் பயன்படுத்துதல் (பயன்பாடு) அல்லது நிலப்பரப்பில் இருந்து ஆயிரக்கணக்கான அடி கீழே நிரந்தரமாகச் சேமித்தல் (சேமிப்பு).

**பொது அறிவிப்பு தரநிலை (Common Reporting Standard (CRS):** வரி ஏய்ப்பை எதிர்த்துப் போராட பங்காளர் நாடுகளுக்கு இடையில் தன்னிச்சையாகத் தகவலைப் பரிமாறிக்கொள்வதற்காக 2014 இல் ஓஇசிடி-யால் சிஆர்எஸ் தரநிலை உருவாக்கப்பட்டது. சிஆர்எஸ்-ஐ ஏற்றுக்கொண்டு அதைத் தன் சட்டத்தில் இணைத்துக்கொண்ட அனைத்து நாடுகளுக்கும் இது பொருந்தும்.

**தரவு இடைவெளி முன்னெடுப்பு (Data Gaps Initiative (DGI):** தரவு இடைவெளிகளை அடையாளங்கண்டு, தரவு சேகரிப்பை வலிமைப்படுத்த ஜி20 கேட்டுக்கொண்டதுக்கு இணங்க 2009 இல் தரவு இடைவெளி முன்னெடுப்பின் இரண்டு கட்டங்கள் தொடங்கப்பட்டன. கருத்துரு சட்டகங்களை மேம்படுத்துவதோடு சில புள்ளிவிவர சேகரிப்பு மற்றும் அறிவித்தலில் தரவு இடைவெளி முன்னெடுப்பின் முதல் கட்டம் (DGI-1: 2009-15) கவனம் செலுத்தியது. கொள்கை பயன்பாட்டிற்காக முறையான சேகரிப்பை நடைமுறைப்படுத்துதல் மற்றும் நம்பத்தகுந்த மற்றும் தக்கநேர புள்ளிவிவரங்களைப் பரப்புதல் ஆகியவையே DGI-2 (2015-21) இன் முக்கிய நோக்கம்.

**கடன்சேவை இடைநிறுத்த முன்னெடுப்பு (Debt Service Suspension Initiative (DSSI):** இது ஜி20 ஆல் 2020 இல் தொடங்கப்பட்டது. பெருந்தொற்றையும் அதன் விளைவுகளையும் சமாளிக்க உலகின் ஏழை நாடுகளுக்கு அவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்துவதை இடைநிறுத்தி கால அவகாசம் அளிக்க இது டிஎஸ்எஸ்ஐ-யால் வழங்கப்பட்டது.

**பேரிடர் மீள்திறன (Disaster Resilience):** மேம்பாட்டுக்கான நீண்ட கால வாய்ப்பை சமரசம் செய்துகொள்ளாமல் ஆபத்துகள், அதிர்ச்சிகள் அல்லது அழுத்தங்களில் இருந்து தனிநபரும், சமுதாயங்களும், அமைப்புகளும், நாடுகளும் அவற்றைத் தழுவி மீண்டுவரும் திறன்.

**பேரிடர் மீள்திறன் கட்டமைப்பு (Disaster Resilient Infrastructure):** இயற்கைப் பேரிடர்களான வெள்ளம், நிலநடுக்கம் அல்லது காட்டுத்தீ போன்றவற்றின் பாதிப்பை எதிர்த்து நிற்கத்தக்கதாக வடிவமைக்கப்படும் முக்கிய கட்டிடங்கள், பொது சமுதாய வசதிகள், போக்குவரத்து அமைப்புகள், தொலைத்தொடர்புகள் மற்றும் மின்னாற்றல் அமைப்புகள் இதில் அடங்கும்.

**கூட்டணியை அதிகாரப்படுத்தல் (Empower Alliance):** எம்பவர் (EMPOWER) என்பது ஒரு தனியார் துறையால் தலைமை தாங்கப்படும் கூட்டணி. தனியார் மற்றும் பொதுத்துறைகளுக்கு இடையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் பெண்கள் வாய்ப்புகளை அணுகுவதை மேம்படுத்துதலுக்கானது. பொருளாதார செயல்பாடுகளில் பெண்கள் பங்கேற்பதைத் தடுக்கும் தடைகளை அகற்ற இது முயலுகிறது.

**நிதி நடவடிக்கைப் பணிக்குழு** (Financial Action Task Force (FATF): எஃப்ஏடிஎஃப் என்பது ஒரு அரசுகளுக்கு இடையிலான அமைப்பு. உலக அளவில் பணமோசடி செய்து தீவிர வாதிகளுக்கு நிதியுதவி அளிப்பதை கண்காணிக்கும் அமைப்பு. பண மோசடியையும் தீவிரவாதிகளுக்கு உதவுவதையும் தடுக்கும் நோக்கத்தோடு இது உலகளாவிய தரநிலைகளை உருவாக்க பணிபுரிகிறது.

**நிதி நிலைத்தன்மை வாரியம்** (Financial Stability Board (FSB): எஃப்எஸ்பி ஒரு சர்வதேச அமைப்பு. இது உலக நிதி அமைப்பைக் கண்காணித்து பரிந்துரைகள் செய்கிறது. சர்வதேச நிதி நிலைத்தன்மையை ஊக்குவிப்பது எஃப்எஸ்பி-யின் ஒரு முக்கிய நோக்கமாகும்.

**உணவுக் கூட்டமைப்பு** (Food Coalition): உணவுக் கூட்டமைப்பு என்பது பல பங்குதாரர்களின் தளம் ஆகும். வேளாண் உணவு அமைப்பின் உருமாற்றம் நோக்கிய மாற்றத்தை வேகப்படுத்துவது மற்றும் தேவையில் இருக்கும் நாடுகளுக்காக கூட்டணிகளை அமைப்பதும் கூட்டு ஆதரவைத் திரட்டுவதும் அதன் நோக்கம். வளர்ந்துவரும் உணவு பாதுகாப்பின்மை, காலநிலை அதிர்வுகள் தீவிரமாதல், உலக உணவு மற்றும் விவசாயத்தில் நிலைத்தன்மை இல்லாமை ஆகிய உலக முன்னுரிமைகள் குறித்து இது எதிர்வினையும் ஆற்றுகிறது.

**வேலையின் எதிர்காலம்** (Future of Work): தொழில்நுட்ப, தலைமுறை மற்றும் சமூக மாற்றங்கள் ஆகியவற்றின் தாக்குறவால் அடுத்த பத்தாண்டுகளில் வேலை எவ்வாறு செய்யபப்டும் என்பதை வேலையின் எதிர்காலம் விளக்குகிறது.

**ஜி20 புத்தாக்கக் கூட்டிணைவு** (G20 Innovation League): 2021 இல் ஜி20 இன் தலைமைப் பொறுப்பில் இத்தாலி இருந்தபோது தொடங்கப்பட்டது. உலகின் மிகவும் அழுத்தம்தரும் சவால்களை எதிர்கொள்ள கண்டுபிடிப்பிலும் தொழில்நுட்பத்திலும் சர்வதேச முதலீடுகளை ஊக்குவிக்கவும் பொது மற்றும் தனியார் ஒத்துழைப்பை ஏற்படுத்தவும்ஜி20 புத்தாக்கக் கூட்டிணைவு முயற்சி செய்கிறது.

**ஜி20 தண்ணீர் தளம்** (G20 Water Platform): 2021 இல் தொடங்கப்பட்டு சவுதி அரேபியாவால் நடைமுறைபப்டுத்தப்பட்ட இது உலகெங்கும் நிலைத்த தண்ணீர் மேலாண்மை பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் ஒரு டிஜிட்டல் கருவியாகும்.

**உலகக் கட்டமைப்பு சிறப்புமையம்** (Global Infrastructure Hub (GI Hub): 2014 இல் ஜி20 ஆல் நிறுவப்பட்டது. செயல் நோக்குடைய திட்டங்கள் மூலம் நிலைத்த, மீள்திறனுடைய மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய கட்டமைப்பை வழங்குவதை துரிதப்படுத்தும் லாப நோக்கற்ற ஓர் அமைப்பே ஜிஐ ஹப் ஆகும். இது பொது மற்றும் தனியார் துறைகளுடன் ஒத்துழைத்து ஓர் அறிவைப் பகரும் மையமாகத் திகழ்கிறது.

**உலக பங்குதாரர் நிதி உள்ளடக்கம்** (Global Partnership for Financial Inclusion (GPFI): தென் கொரியாவின் சியோலில் 10 டிசம்பர் 2010 இல் அதிகாரபூர்வமாகத் தொடங்கப்பட்டது. சரியிணையினரோடு கற்றல் (peer learning), அறிவைப் பகிர்தல், கொள்கையைப் பரிந்து பேசுதல் மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் நிதி உள்ளடங்கல் சிக்கல் பற்றி செயலாற்ற ஜிபிஎஃப், ஜி20 நாடுகளுக்கும் ஜி20 இல் இல்லாத நாடுகளுக்கும் பிற பங்குதாரர்களுக்கும் ஓர் அனைத்தும் உள்ளடங்கிய தளம் ஆகும்.

**உலகப் பொதுவான பொருட்கள்** (Global Public Goods (GPGs): உலகின் அனைத்துக் குடிமக்களையும் பாதிக்கும் நன்மைகளைக் கொண்ட பொருட்கள் அல்லது சேவைகள் அவை நமாது வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைப் பாதிக்கின்றன நமது இயற்கைச் சூழல், வரலாறுகள் மற்றும் கலாச்சாரங்கள், மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் இருந்து மெட்ரிக் அமைப்பு போன்ற அன்றாட பயன்பாட்டு அமைப்புகள் வரை.

**எஃகு மிகை திறன் பற்றிய உலக அமைப்பு** (Global Forum on Steel Excess Capacity (GFSEC): எஃகு துறையில் மிகை திறனையும் சந்தைச் செயல்பாட்டை மேம்படுத்துவது பற்றியுமான சவாலுக்கு விவாதித்துக் கூட்டுத் தீர்வை கண்டறியும் சர்வதேச தளமே ஜிஎஃப் எஸ்இசிஆகும். 2016 இல் ஹாங்சௌ உச்சிமாநாட்டில் ஜி20 தலைவர்களால் இந்த உலகளாவிய தளம் உருவாக்கப்பட்டது. இந்த உலகளாவிய தளம் அனைத்து ஜி20 உறுப்பினர்களுக்கும், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (ஓஇசிடி) ஆர்வமுள்ள உறுப்பினர்களுக்கும் இது ஒரு திறந்த நிலை தளமாகும்.

**உலக நிதி பாதுகாப்பு வலைப்பின்னல்** (Global Financial Safety Net (GFSN): ஜிஎஃப்எஸ்என்-ஐ ஒன்றில் சாத்தியமான அதிர்ச்சிகளுக்கு காப்பீடு அல்லது சிக்கல் தீர்வுக்கான நிதி தேவைப்படும் நாடுகளுக்கு நிதி ஆதாரங்களை வழங்கும் ஒரு தொகுதி நிறுவன ஏற்பாடு என்று பரந்துபட்ட அளவில் வரையறுக்கலாம். சிக்கலில் இருக்கும் நாடுகள், தங்கள் சுய நிதி திறனை மீள்மைக்க மற்றும் பொருத்தமான கட்டுப்பாடுகளுடன் அதன் உள்நாட்டு கொள்கைத் தோல்விகளை சரிசெய்தலுக்கு உதவுவதே இந்த ஏற்பாடுகளின் நோக்கம் ஆகும்.

**பசுமை நிதி** (Green Finance): பசுமை நிதி என்பது சுற்றுச்சூழலுக்குப் பொருத்தமான திட்டங்கள் அல்லது காலநிலை மாற்ற அம்சங்களைத் தழுவிக்கொள்ளும் திட்டங்களுக்குக் குறிப்பாகப் பயன்படுத்தப்படும் நிதி ஏற்பாடுகளைக் குறிக்கிறது.

**பசுமை மீட்சி** (Green Recovery) : எதிர் வரும் ஆண்டாண்டு காலம் மக்களுக்கும் பூமிக்கும் பயன்தரும் கொள்கைகள் மற்றும் தீர்வுகளில் பசுமை மீட்சி கவனம் செலுத்துகிறது. நாடுகள் பொருளாதாரத்தை வளர்த்து வேலை வாய்ப்பைப் பெருக்கும் அதே வேளையில் சிறப்பாக கட்டியமைக்கவும் இது நாடுகளுக்கு உதவும்.

**பொருளாதாரம் மற்றும் நிதி புள்ளியியல் பற்றிய இடை-முகவாண்மைக் குழு** (Inter-Agency Group on Economic and Financial Statistics (IAG): இது 2008 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிதித்துறை சம்பந்தப்பட்ட புள்ளியியல் மற்றும் தரவு இடைவெளிகள் தொடர்பான சிக்கல்களை ஒருங்கிணைந்து கண்காணிப்பதே ஐஏஜி-யின் முக்கிய பங்கு. சர்வதேச தீர்வுகளுக்கான வங்கி (பிஐஎஸ்), ஐரோப்பிய மத்திய வங்கி (இசிபி), யூரோஸ்டேட், சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எஃப்), பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (ஓஇசிடி), ஐக்கிய நாடுகள் (யுஎன்) மற்றும் உலக வங்கி ஆகியவை ஐஏஜி-யில் அடங்கி உள்ளன.

**சர்வதேச எரிசக்திக் குழு** (International Energy Forum (IEF): 71 நாடுகளின் எரிசக்தித்துறை அமைச்சர்கள் அடங்கிய உலகின் முன்னணி சர்வதேச அமைப்புதான் ஐஇஎ்ப். இதில் எரிசக்தி உற்பத்தி செய்யும் மற்றும் நுகரும் நாடுகள் ஆகிய இருதரப்பும் அடங்கியுள்ளனர், இது எரிசக்தி பற்றிய பேச்சு வார்த்தைக்கான முக்கிய உலக அமைப்பாகும்.

**சட்டவிரோத, அறிவிக்கப்படாத மற்றும் முறைப்படுத்தப்படாத (ஐயுயு) மீன்பிடித்தல்** (Illegal, Unreported, and Unregulated (IUU) Fishing): இது பல வகையான மீன்பிடி செயல்களைஉள்ளடக்கிய ஒரு பரந்துபட்ட சொல்லாட்சி. சட்டவிரோத, அறிவிக்கப்படாத மற்றும் முறைப்படுத்தப்படாத மீன்பிடித்தல் நடவடிக்கை தேசிய மற்றும் சர்வதேச மீன்பிடித்தல் நெறிமுறைகளை மீறுகிறது. ஐயுயு மீன்பிடித்தல் கடல்சார் சூழலியலையும் நிலைத்த மீன்பிடித்தலையும் அச்சுறுத்தும் ஓர் உலகப்பிரச்சினை.

**சர்வதேச மீதேன் உமிழ்வு கண்காணிப்பகம்** (International Methane Emissions Observatory (IMEO): மீதேன் உமிழ்வைக் கணிசமாகக் குறிப்பதற்கு ஊக்குவிக்கும் ஐநா சுற்றுச்சூழல் திட்டத்தின் (யுஎன்இபி) முன்முயற்சியே தரவு சார்ந்த செயல் நோக்குடைய ஐஎம்இஓ ஆகும்.

**பல்லுயிர் மற்றும் சூழல் அமைப்பு சேவைகள் பற்றிய, அரசுகஐக்கொண்ட அறிவியல்-கொள்கைத் கூட்ட்மைப்பு** (Intergovernmental Science-Policy Platform on Biodiversity and Ecosystem Services (IPBES): பல்லுயிர் மற்றும் சூழல் அமைப்பு சேவைகள் மற்றும் உலக அளவில் அதன் தொடர்புகள் பற்றிய முறையான தக்க காலத்திலான அறிவு மதிப்பீட்டை ஐபிபிஇஎஸ் செய்கிறது. ஜி20 இன் தலைமைப் பொறுப்பில் ஜப்பான் இருந்தபோது ஐபிபிஇஎஸ் தொடங்கப்பட்டது.

**நியாயமான மாற்றம்** (Just Transition): முடிந்த அலவில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் நியாயமானதும் உள்ளடங்கியதுமான வழியில் ஒருவரையும் விட்டுவிடாமல் பொருளாதாரத்தை பசுமைப்படுத்துவதே நியாயமான மாற்றம் என்பதற்கு அர்த்தம்.

**நாணயச் சந்தை நிதி** (Money Market Fund): ஒரு நாணயச் சந்தை நிதி என்பது ஒரு வகையான பரஸ்பர நிதி; எளிதல் பணமாக்கக்கூடிய, குறுகிய காலத்துக்கு முதலீடு செய்யும் நிதிசார் ஆவணங்கள். இந்த நிதிசார் ஆவணங்களில் பணம், பணத்துக்கு நிகரான ஈடுகள், அதிக கடன் மதிப்பீடு, குறுகிய முதிர்வுகாலம் கொண்ட கடன் அடிப்படை ஈடுகள் ஆகியவை அடங்கும்.

**பன்முக மேம்பாட்டு வங்கிகள்** (Multilateral Development Banks (MDBs): வளரும் நாடுகளில் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டை ஊக்குவிக்கும் சர்வதேச நிதி நிறுவனங்களே எம்டிபி-கள். உலக வங்கி, ஆசிய மேம்பாட்டு வங்கி (ஏடிபி), மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான ஐரோப்பிய வங்கி (இபிஆர்டி), அமெரிக்க உள்நாட்டு மேம்பாட்டு வங்கி (ஐஏடிபி) மற்றும் ஆப்பிரிக்க மேம்பாட்டு வங்கி ஆகியவை முக்கியமான எம்டிபி-கள் ஆகும்.

**வங்கி அல்லாத நிதி நிறுவனம்** **(Non-Bank Financial Institution (NBFI):** ஒரு என்பிஎ்ஃப்ஐ என்பது முழு வங்கி உரிமம் இல்லாத நிதி நிறுவனம் மற்றும் அதனால் பொதுமக்களிடம் இருந்து வைப்புத்தொகைகளைப் பெறமுடியாது. இருப்பினும், என்பிஎ்ஃப்ஐ, முதலீடு (கூட்டு மற்றும் தனிநபர்), ஆபத்து பூலிங், நிதி ஆலோசனை, தரகு, பணம் அனுப்புதல் மற்றும் காசோலை பணமாக்கல் போன்ற மாற்று நிதி சேவைகளை என்பிஎ்ஃப்ஐ செய்கிறது.

**ஓஇசிடி லஞ்ச எதிர்ப்பு மாநாடு** **(OECD Anti-Bribery Convention):** சர்வதேச வணிக மரிமாற்றங்களில் அயல்நாட்டு பொது அதிகாரிகளின் லஞ்சத்தை எதிர்ப்பது பற்றிய மாநாடு என்றும் அழைக்கப்படும் ஓஇசிடி லஞ்ச எதிர்ப்பு மாநாடு என்பது சட்ட ரீதியாகக் கட்டுப்படுத்தும் சர்வதேச ஊழல் எதிர்ப்பு அமைப்பு. இது லஞ்ச பரிமாற்றத்தின் (நபர் அல்லது நிறுவனம் ஒரு லஞ்சத்தை அளிக்க முன்வருதல், உறுதிகூறுதல் அல்லது அளித்தல்) "வழங்கும் பக்கத்தில்" கவனம் செலுத்துகிறது. மாநாட்டின் தரப்பினராக இருப்பவர்களுக்கு சட்டத்தின் படி லஞ்சம் என்பது தண்டனைக்குரிய குற்றம் ஆகும்.

**ஒரே சுகாதாரம்** **(One Health):** 'ஒரு சுகாதாரம்' என்பது மக்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை ஒருங்கிணைந்து, ஒன்றிணைக்கும் அணுகுமுறை. கோவிட்-19 பெருந்தொற்று போன்ற ஆரோக்கிய பிரச்சினைகளை தடுப்பதும், கணிப்பதும், கண்டறிவதும், எதிர்வினையாற்றுவதும் குறிப்பாக முக்கியமானதாகும்.

**ஒசாக்கா நீலப் பெருங்கடல் தொலைநோக்குப்பார்வை** **(Osaka Blue Ocean Vision):** இது 2019 ஆம் ஆண்டு ஜப்பான் ஜி20 தலைமைப் பொறுப்பில் இருந்தபோது தழுவிக்கொள்ளப்பட்டது. ஒசாக்கா நீலப் பெருங்கடல் தொலைநோக்குப் பார்வை ஜி20 நாடுகளால் "2050 க்குள் கடலில் பிளாஸ்டிக் கழிவுகளை போடுதல் பூஜ்யமாகக் குறைக்கப்பட வேண்டும்" என்று தன்னார்வமாக உறுதி ஏற்கப்பட்டது.

**பாரிஸ் உடன்பாடு** **(Paris Agreement):** பாரிஸ் உடன்பாடு என்பது காலநிலை மாற்றம் குறித்த சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்தும் சர்வதேச ஒப்பந்தமாகும். இந்த உடன்பாடு 12 டிசம்பர் 2015 இல் தழுவிக்கொள்ளப்பட்டு 4 நவம்பர் 2016 இல் அமலுக்கு வந்தது. இந்த உடன்பாடு உலக வெப்பமயமாதலை 2 டிகிரி செல்சியஸுக்கும் கீழே கொண்டு வருவதையும், தொழிற்சாலைகளுக்கு முந்தைய அளவோடு ஒப்பிடும்போது 1.5 டிகிக்கு கொண்டு வருவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

**பாரிஸ் மன்றம்** **(Paris Club):** பாரிஸ் மன்றம் என்பது ஒரு பெரும் அரசுகளுக்கு இடையிலான அதிகாரபூர்வ கடன் கொடுக்கும் நாடுகளின் மன்றம். முறைசாரா இயல்புடைய இந்தக் குழு கடன் கொடுக்கும் நாடுகளின் பணம்செலுத்துதல் தொடர்பான பிரச்சினைகளுக்கு முடியக்கூடிய தீர்வுகளை முயற்சி செய்கின்றன.

**வறுமை குறைப்பு மற்றும் வளர்ச்சி அறக்கட்டளை** **(Poverty Reduction and Growth Trust (PRGT):** வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் வறுமை குறைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தி குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு பிஆர்ஜிடி மூலமாக ஐஎம்எஃப் சலுகையோடு நிதி ஆதரவை வழங்குகிறது.

**ஆப்பிரிக்காவில் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்** **(Programme for Infrastructure Development in Africa (PIDA):** ஒருங்கிணைந்த வட்டார மற்றும் கண்டம்சார்ந்த கட்டமைப்பு வலைப்பின்னல் மற்றும் சேவைகள் மூலம் சமூகப் பொருளாதார மேம்பாட்டையும் வறுமை ஒழிப்பையும் ஊக்குவிப்பதே பிஐடிஏ-வின் ஒட்டுமொத்த இலக்கு. ஆப்பிரிக்காவில் தனியார் முதலீட்டை ஊக்குவிக்க ஜி20 இன் தலைமைப் பொறுப்பில் ஜெர்மனி இருக்கும்போது பிஐடிஏ முன்னெடுக்கப்பட்டது.

**வட்டார நிதியுதவி ஏற்பாடுகள்** **(Regional Financing Arrangements (RFAs):** தங்கள் வட்டாரங்களில் நிதி கஷ்டங்களை அனுபவித்துவரும் நாடுகளுக்கு நாடுகளின் குழுக்கள் பரஸ்பரம் நிதியுதவிகளை உறுதிசெய்யும் நுட்பம் அல்லது ஏற்பாடுகளே ஆர்எஃப்ஏ-க்கள்.

**மீள்திறன் மற்றும் நிலைத்தன்மை அறக்கட்டளை** **(Resilience and Sustainability Trust (RST):** குறைந்த வருமான மற்றும் ஆபத்தான மத்திய வருமான நாடுகள், புற அதிர்ச்சிகளில் இருந்து மீள்திறனைக் கட்டவும் நிலைத்த வளர்ச்சியை உறுதிசெய்யவும் தங்கள் நீண்ட கால பணம்செலுத்தல் இருப்பின் நிலைத்தன்மைக்குப் பங்களிக்கவும் உதவுவதுதான் ஐஎம்எஃப் – இன் ஆர்எஸ்டி.

**சிறப்பு வரைவு உரிமைகள்** **(Special Drawing Rights (SDRs):** அதன் உறுப்பு நாடுகளுக்கு அதிகாரபூர்வ இருப்புகளைக் கூடுதலாக அளிக்க சர்வதேச நாணய நிதியத்தால் (ஐஎம்எஃப்) உருவாக்கப்படும் சர்வதேச இருப்பு சொத்துதான் எஸ்டிஆர் ஆகும். எஸ்டிஆரின் மதிப்பு உலகின் ஐந்து பெரும் நாணயத் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டது–யுஎஸ் டாலர், யூரோ, யுவான், யென் மற்றும் யுகே-யின் பவுண்ட்.

**நிலைத்த வளர்ச்சி இலக்குகள்** **(Sustainable Development Goals (SDGs):** 2015 இல் ஐக்கிய நாடுகளால் தழுவிக்கொள்ளப்பட்ட எஸ்டிஜி-கள், உலக இலக்குகள் என்றும் அழைக்கப்படுகின்றன. வறுமையை ஒழிக்கவும், பூமியைப் பாதுகாக்கவும், 2030 க்குள் அனைத்து மக்களுக்கும் அமைதியும் செழிப்பும் கிடைபப்தை உறுதி செய்யவும் விடுக்கப்பட்ட ஓர் ஒட்டுமொத்த அழைப்புதான் இது. ஒருங்கிணைக்கபப்ட்டுள்ள 17 எஸ்டிஜி-களில் ஒரு பகுதியில் எடுக்கபப்டும் நடவடிக்கை இன்னொரு பகுதியின் விளைவைப் பாதிக்கிறது.

**நிலைத்த நிதியுதவி** **(Sustainable Finance):** முதலீட்டு முடிவுகளை எடுக்கும்போது சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (இஎஸ்ஜி) பரிசீலனைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும் ஒரு செயல்முறையே நிலைத்த நிதியுதவி ஆகும். இது நிலைத்த பொருளாதாரச் செயல்பாடுகளிலும் திட்டங்களிலும் நீண்ட கால முதலீடுகளுக்கு வழிகோலுகிறது.

**உணவு இழப்பு மற்றும் விரயத்தை அளத்தல் மற்றும் குறைத்தல் பற்றிய தொழிநுட்ப தளம்** **(Technical Platform on the Measurement and Reduction of Food Loss and Waste (TPLFW):** ஜி20 இன் தலைமையில் துருக்கி இருந்தபோது 2015 இல் இது தொடங்கப்பட்டது. உணவு இழப்பையும் விரயத்தையும் குறைக்க அளவீடு, குறைத்தல், கொள்கைகள், கூட்டணிகள், செயல்கள் மற்றும் உலக அளவில் புதிய தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய வெற்றிகரமான மாதிரிகள் பற்றிய தகவலை அணுக இந்தத் தளம் சிறந்தமுறையில் ஒரு நுழைவாயிலாகச் சேவைபுரிகிறது.

**மொத்த இழப்பு ஈடுகட்டும் திறன் (Total Loss Absorbing Capacity (TLAC):** முதலீட்டாளர்களுக்கு மொத்த இழப்பு ஈடுகட்டும் திறன் என்பது ஒரு சர்வதேச தரநிலை. அது உலக சிஸ்டமிக்கலி முக்கிய வங்கிகளுக்கு (ஜி-சிப்ஸ்) இழப்புகளை முதலீட்டாளர்களுக்குக் கடத்தி ஒரு அரசு பெய்ல் அவுட் அபாயத்தைக் குறைக்க போதுமான வீதப்பங்கும் 'பெய்ல்-இன்–டெப்ட் டும் இருக்க வேண்டும் என்று உறுதிசெய்கிறது.

**யுஎன்சிஎல்ஓஎஸ் (UNCLOS):** கடலின் சட்டம் பற்றிய ஐக்கிய நாடுகள் மாநாட்டில் (யுஎன்சிஎல்ஓஎஸ்) 1982 இல் உருவாக்கப்பட்டது. இந்த மாநாடு உலகின் பெருங்கடல்கள் மற்றும் கடல்கள் பற்றி விரிவான சட்டங்களையும் ஆணைகளையும் வகுக்க, பெருங்கடல்கள் மற்றும் அதன் ஆதாரங்களின் அனைத்துப் பயன்பாடுகளையும் ஆளுகைசெய்யும் விதிகளை அது உருவாக்குகிறது. மேலும் அது கடல் சட்டத்தின் குறிப்பிட்ட பகுதிகளில் கூடுதல் மேம்பாட்டிற்கான ஒரு சட்டகத்தையும் வழங்குகிறது.

**யுஎன்-ஹேபிட்டட் (UN-Habitat):** ஐக்கிய நாடுகள் மனித குடியிருப்புகள் திட்டத்தின் (யுஎன்- ஹேபிட்டட்) நோக்கம், உலகம் முழுவதும் சமூக மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக நிலைத்த நகரங்களையும் மாநகர்களையும் ஊக்குவிப்பதுதான். யுஎன் அமைப்புக்குள் நகர மயமாகுதல் மற்றும் மனித குடியிருப்பு சம்பந்தப்பட்ட அனைத்து சிக்கல்களுக்கும் யுஎன் ஹேபிட்டட்தான் மையப் புள்ளியாகும்.

**அனைவருக்கும் ஆரோக்கிய பாதுகாப்பு (Universal Health Coverage):** எந்தப் பொருளாதாரக் கஷ்டங்களும் இல்லாமல் எங்கு தேவைப்படுகிறதோ அங்கு அவர்களுக்குத் தேவையான சுகாதாரச் சேவைகளை எல்லா மக்களும் பெறவேண்டும் என்பதே அனைவருக்கும் ஆரோக்கியப்பாதுகாப்பு என்பதற்கான அர்த்தம். சுகாதார ஊக்குவிப்பு, தடுப்பு, சிகிச்சை, மறுவாழ்வு மற்றும் நோய்த்தடுப்பு பராமரிப்பு ஆகிய அனைத்தையும் இது உள்ளடக்குகிறது.

**யுஎன்எஸ்சி தீர்மானம் (UNSC Resolution 2347):** யுஎன்எஸ்சி தீர்மானம் 2347, முக்கியமாக, தீவிரவாதத்தையும் கலாச்சார சொத்துக்களை வேண்டுமென்றே அழித்துக் கொள்ளையிடும் தீவிரவாதிகளின் முயற்சியையும் எதிர்க்கும் போராட்டத்தில் கவனம் செலுத்துகிறது. மேலும் அது பரந்த அளவில் ஓர் ஆயுதம் ஏந்தும் போரில் கலச்சார பாரம்பரியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உலக சமுதாயத்தின் பொது ஆர்வத்தையும் கடப்பாட்டையும் கருத்தில் கொள்ளுகிறது.

**பெண் தொழில்முனைவோர் நிதியுதவி முன்னெடுப்பு (Women Entrepreneurs Finance Initiative (We-Fi):** அக்டோபர் 2017 இல் இது நிறுவப்பட்டது. வீ-ஃபை பெண் தொழில் முனைவோரை ஆதரிக்கிறது. நிதி தொடர்பான தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் அணுகலை மேம்படுத்துவது, திறன் உருவாக்குதல், வலைப்பின்னலை விரிவுபடுத்துவது, வழிகாட்டுதல் மற்றும் உள்ளூர் மற்றும் உலக சந்தைகளில் இணையும் வாய்ப்பை வழங்குதல்.

# ஜி20 முக்கியமான பொருளாதாரக் குறியீடுகள்/புள்ளிவிபரங்கள்

| குறியீடுகள் | G20 (US$ டிரில்லியன்) | | உலகில் பங்கு (%) | | வளர்ச்சி (%) (2010-2021) |
|---|---|---|---|---|---|
| | 2010 | 2021 | 2010 | 2021 | |
| **உற்பத்தி//செயல்பாடு** | | | | | |
| ஜிடிபி | 55.7 | 70.1* | 85.9 | 85.6 | 2.3# |
| மதிப்பு கூட்டப்பட்டது, விவசாயம் | 1.9 | 2.6* | 70.2 | 71.0 | 3.1# |
| மதிப்பு கூட்டப்பட்டது, தொழிற்துறை | 14.3 | 18.5* | 82.9 | 83.6 | 2.6# |
| மதிப்பு கூட்டப்பட்டது, சேவைகள் | 36.3 | 45.9* | 86.9 | 86.5 | 2.4# |
| மக்கள்தொகை | 4.5 | 4.9 | 64.9 | 62.1 | 0.7 |
| **வணிகம்** | | | | | |
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 11.7 | 17.1 | 76.4 | 76.4 | 3.5 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 14.5 | 17.4 | 78.4 | 76.9 | 1.7 |
| மொத்த வணிகப்பொருள் வியாபாரம் | 26.1 | 34.4 | 77.5 | 76.7 | 2.5 |
| சேவைகள் ஏற்றுமதி | 3.2 | 4.9 | 79.6 | 80.7 | 4.0 |
| சேவைகள் இறக்குமதி | 3.0 | 4.4 | 77.2 | 78.0 | 3.5 |
| மொத்த சேவைகள் வணிகம் | 6.2 | 9.3 | 78.4 | 79.4 | 3.8 |
| **முதலீடு** | | | | | |
| இன்வார்ட் எஃப்டிஐ | 1.0 | 1.1 | 72.7 | 69.8 | 0.8 |
| அவுட்வார்ட் எஃப்டிஐ | 1.1 | 1.5 | 77.0 | 87.6 | 3.1 |
| **டிஜிட்டல் பொருளாதாரம்** | | | | | |
| டிஜிட்டல் மூலம் வழங்கும் சேவைகளின் ஏற்றுமதி | 1.6 | 3.2 | 85.6 | 84.1 | 6.5 |
| ஐசிடி தகவல்தொழில்நுட்பம் சார் சேவைகளின் ஏற்றுமதிகள் | 0.3 | 0.7 | 85.2 | 85.1 | 9.9 |

**ஆதாரம்:** *IMF-DOTS, IMF-IFS, UNCTAD, OECD*

**குறிப்பு:** வளர்ச்சிக்கான, கூட்டு ஆண்டு வளர்ச்சி வீதம் (சிஏஜிஆர்) 2010-2021 காலகட்டத்தில் கணக்கிடப்பட்டது.

* புள்ளிவிவரங்கள் 2020 ஆம் ஆண்டிற்கானவை. # சிஏஜிஆர் 2010-2020 ஆம் ஆண்டிற்காகக் கணக்கிடப்பட்டுள்ளது

# ஜி20 பணிக் குழுக்கள் (இந்தியத் தலைமை)

## வழிநடத்தி முன்னெடுப்பு

- விவசாயம்
- ஊழல் எதிர்ப்பு
- கலாச்சாரம்
- டிஜிட்டல் பொருளாதாரம்
- பேரிடர் ஆபத்து மீள்திறன் மற்றும் குறைப்பு
- மேம்பாடு
- கல்வி
- வேலைவாய்ப்பு
- சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை நிலைத்தன்மை
- ஆற்றல் மாற்றம்
- ஆரோக்கியம்
- வணிகம் மற்றும் முதலீடு
- சுற்றுலா

## நிதி சார்ந்த முன்னெடுப்புகள்

- பணிக்குழு சட்டகம் (FWG)
- சர்வதேச நிதி கட்டமைப்பு (IFA)
- கட்டமைப்பு பணிக்குழு (IWG)
- நிலைத்தன்மை நிதி பணிக்குழு (SFWG)
- நிதி உள்ளடங்கல்களுக்கான உலகப் பங்காண்மை (GPFI)
- இணைந்த நிதி மற்றும் ஆரோக்கிய உதவிக் குழு
- சர்வதேச வரிவிதிப்பு நிரல்
- நிதித்துறை சிக்கல்கள்

# G20 செயல்குழுக்கள் (இந்தியத் தலைமை)

- வணிகம்20 (B20)
- குடிமை20 (C20)
- தொழிலாளர்20 (L20)
- பாராளுமன்றம்20 (P20)
- அறிவியல்20 (S20)
- உயர் தணிக்கை நிறுவனங்கள்20 (SAI20)
- புத்தாக்கம்சார் புதுத்தொழில்20 (S20)
- கருத்து/சிந்தனை20 (T20)
- நகர்ப்புறம்20 (U20)
- பெண்கள்20 (W20)
- இளைஞர்20 (Y20)

# G20 இன் நிரந்தர அழைப்பாளர்கள்

## நாடு

- ஸ்பெயின்

## சர்வதேச அமைப்புகள்

- ஐக்கிய நாடுகள் (UN)
- சர்வதேச நாணய நிதியம் (IMF)
- உலக வங்கி (WB)
- உலக சுகாதார அமைப்பு (WHO)
- உலக வணிக அமைப்பு (WTO)
- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)
- நிதி நிலைத்தன்மை வாரியம் (FSB)
- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (OECD)
- ஆப்பிரிக்க ஒன்றியம் (AU)
- ஆப்பிரிக்க ஒன்றிய மேம்பாட்டு முகவம் (AUDA-NEPAD)
- தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ASEAN)

# விருந்தினர் நாடுகள் & சர்வதேச அமைப்புகள்

## (ஜி20 இந்தியத் தலைமை 2023)

## நாடு

- வங்காளதேசம்
- எகிப்து
- மொரிஷியஷ்
- நெதர்லாந்து
- நைஜீரியா
- ஓமன்
- சிங்கபூர்
- யுஏஇ

## சர்வதேச அமைப்புகள்

- சர்வதேச் சூரிய கூட்டணி (ISA)
- பேரிடர் மீள்திறன் கட்டமைப்பு இணைப்பு (CDRI)
- ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB)

# ஜி20 உறுப்பு நாடுகள்

ஆஸ்திரேலியா

அர்ஜெண்டினா

பிரேசில்

கனடா

சீனா

இயு

பிரான்ஸ்

ஜெர்மனி

இந்தியா

இந்தோனேஷியா

இத்தாலி

ஜப்பான்

மெக்சிகோ

ரஷ்யா

தென்
ஆப்பிரிக்கா

சவுதி அரேபியா

தென் கொரியா

துருக்கி

யுஎஸ் ஏ

யுகே

G20

भारत 2023 INDIA

# இந்தியா ஜி20 தலைமை: சமூக ஊடகத் தொடர்பு

**https://www.g20.org**

https://twitter.com/g20org

https://www.facebook.com/g20org

https://www.instagram.com/g20org/?hl=en

https://www.youtube.com/channel/UCspVYmJSYUek633_enhLo3w

**இந்த ஆவணத்தை அணுக மற்றும் கடந்த G20 & T20 தகவல்தொடர்புகளுக்கு:**

**https://bit.ly/3UiAa9s**

**QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**

**படங்கள் கடன்**: pixabay.com